பக்கங்கள்: 12
விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 18 வியாழக்கிழமை 02.07.2020 கதிர் 239

### இது ரகசியம் அல்ல!

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களை நேற்றுக் காலை போசனத்துடன் சந்திக்கின்றார் என்றும் –

தேர்தல் காலத்தை ஒட்டிப் பல குண்டுகளை அவர் கொளுத்திப் போடுவார் என எதிர்பார்க்கலாம் என்றும் –

பக்கம் 02 »

## பிரசாரத்துக்காக இராணுவத்தை களமிறக்கியுள்ளது கோட்டா அரசு

### தடுத்து நிறுத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் ஐக்கிய மக்கள் சக்தியின் அவசர வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 02

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு தேர்தல் பிரசாரத்தில் இராணுவத்தினரை ஈடுபடுத்தியுள்ளது. இதனைத்தேர்தல்கள் ஆணைக்குழு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று அதன் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச பக்கம் 02 »

## நல்லை ஆதீன முதல்வரிடம் ஆசி பெற்ற முன்னணியினர்



(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 02

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பக்கம் 02 »

## தரம் 01, 02, முன்பள்ளி ஓகஸ்ட் 10இல் ஆரம்பம்

### கல்வியியல் கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகள் ஜூலை 07 ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 02

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளினதும் தரம் 01, 02, முன்பள்ளிகளை எதிர்வரும் ஓகஸ்ட் 10 ஆம் திகதி முதல் மீளத் திறப் பக்கம் 02 »

## கிரிக்கெட் வீரர்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தாதீர்!

### அர்ஜுன ரணதுங்க வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 02

2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தொடரின்போது ஆட்ட நிர்ணயம் இடம்பெற்றிருப்பின், அதுபற்றி இத்தனை வருடங்களும் ஏன் குறிப்பிடவில்லை என்ற கேள்வியொன்று காணப்படுகின்றது. பக்கம் 02 »

## கிழக்கு செயலணியில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளை இணைக்க கோட்டா இணக்கம்

கொழும்பு, ஜூலை 02

கிழக்கு மாகாணத்திலுள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தொல்லியல் சின்னங்களைப் பாதுகாக்கும் பணிக்காக அமைக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியில் தமிழ் பேசும் மக்களின் சார்பில் இரண்டு பிரதிநிதிகளை இணைக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பக்கம் 02 »

## ராஜபக்ஷக்களின் கூட்டணிக்குள் மைத்திரி அணிக்கு எதிராகச் சதி!

### வெற்றி உறுதி என்கிறார் ரோஹன லக்ஸ்மன் பியதாச

நாடாளுமன்றத் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தோல்வியடையச் செய்வதற்கு ராஜபக்ஷக்கள்தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குள் சதித்திட்டம் தீட்டப்படுகின்றது. இவ்வாறான சவால் பக்கம் 02 »

# நான் வென்றால் 1 குடும்பத்துக்கு 20 ஆயிரம் ரூபா!

### நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்த சஜித்தின் தேர்தல் குண்டு இதுதான்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 02

பொதுத்தேர்தலில் நான் வெற்றி பெற்று நாட்டின் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டால் கொரோனாவால் பாதிக்கப்பட்ட எமது மக்களில் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பம் ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் எனத் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரும் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, கிராம மட்டத்தில் இருந்து நகர அபிவிருத்தி மற்றும் எரிபொருள்களின் விலை குறைப்பு எனப் பல அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரித நடவடிக்கையில் மேற்கொள்வேன் என்றும் தெரிவித்தார். பக்கம் 11 »




## பிரசார நடவடிக்கைகளின்போது எனது படத்தை பயன்படுத்தாதீர்

### வேட்பாளர்களுக்கு கோட்டா அதிரடி உத்தரவு



கொழும்பு, ஜூலை 02

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பிரசார நடவடிக்கைகளுக்காக தனது புகைப்படங்களைப் பயன்படுத்தக்கூடாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

அதுபோன்று பாதுகாப்பு சேவைகள், அரச சேவைகள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் பக்கம் 11 »

## இராவணன் இலங்கையை ஆளவில்லை!

### இப்படிக் கூறுகின்றார் எல்லாவல மேதானந்த தேரர்



இலங்கையில் இராவணன் என்ற மன்னர் பக்கம் 02 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இப்பத்தியில் நேற்றுக் கூறியிருந்தேன்.

அலரிமாளிகையில் பரிமாறிய காலை உணவு வரை பல ‘சுவை’யான சம்பவங்கள் நடந்தேறின. அவை குறித்தெல்லாம் நான் இங்கு ஏதும் பகிரப் போவதில்லை.

நான் இப்பத்தியில் அடிக்கடி குறிப்பிடுவது போல, ‘மலிந்தால் சந்தைக்கு வரும்’. வாசகர்கள் பார்த்துக் கொள்வார்கள். விட்டு விடுகிறேன்.

காலை உணவுக்கு இடையே பிரதமருடன் சில நிமிடங்கள் தனித்து உரையாடக் கிடைத்தன. அருகில் அவரது இணைப்புச் செயலாளர் ஒருவர் நின்றிருந்தார்.

*“நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இரண்டு வருடங்களுக்குள் தீர்வு தருவேன் என்று ஒரு விசேட செவ்வியை நீங்கள் இரண்டு வருடங்களுக்கு முன்னர் எனக்குத் தந்து இருந்தீர்கள். அதை நினைவூட்ட விரும்புகிறேன். அதிகாரப் பரவலாக்கல் திட்டத்துக்குக் காத்திருக்கிறோம்.”* – என்றேன்.

*“ஆம். ஆம். எனக்கு நல்ல நினைவு உண்டு. அதை நாங்கள் செய்வோம்.”* – என்றார் பிரதமர்.

அதிகாரப் பரவலாக்கல் என்றதும் பிரதமரின் செயலாளர் குறுக்கிட்டார்.

*“அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தையே நீக்க வேண்டும் என்று மிலிந்த மொறகொட கூறியிருக்கின்றாரே...!”* – என்றார் அவர்.

அதற்கு உடன்படாதவர் போல ‘இல்லை’ என்ற பாணியில் பிரதமர் தலையாட்டினார்.

*“13ஆவது திருத்தத்தை நீக்க முற்படுவது வீணாக இந்தியாவுடனான குழப்பத்தை ஏற்படுத்தும்”* – என்று பெரிய அரசியல் விற்பன்னர் போல நான் அளந்தேன்.

என்னை ஒரு செக்கன் கண் வெட்டாது பார்த்தார் பிரதமர்.

*“அப்படியல்ல. ஆனால் 13ஆவது திருத்தத்தின் கீழ் பொலிஸ் அதிகாரங்களைக் கொடுக்கவே முடியாது. முதலமைச்சருக்கு எப்படி பொலிஸ் அதிகாரம் வழங்க முடியும்? ”* – என்று என்னைப் பார்த்துக் கோட்டார் அவர்.

நான் பத்திரிகையாளன். இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதானால் இலங்கை – இந்திய ஒப்பந்த காலத்திலிருந்து பல விடயங்களை நான் கூற வேண்டியிருக்கும். ஆகவே மௌனமாகக் கேட்டிருந்தேன்.

ஓரிரு வினாடிகள் தாமதித்த பிரதமர் தானே சொன்னார்.

*“மாகாண ஆளுநருக்கு வேண்டுமானால் அந்த அதிகாரத்தை – ஒரு பிரதிப் பொலிஸ் மா அதிபரை வழி நடத்துகின்ற அதிகாரத்தை – வழங்கலாம். முதலமைச்சருக்கு வழங்கவே முடியாது.”* – என்று கூறிவிட்டுப் புறப்பட ஆயத்தமானார் பிரதமர்.

பல பேருக்கு மத்தியில் எனக்கும் இதற்கு மேல் விரிவாகப் பேச வாய்ப்புக் கிடைக்கவில்லை.

கிடைத்திருந்தால் என்னிடம் கூறுவதற்குப் பல விடயங்கள் இருந்தன.

*“எங்களிடம் முப்படைகளும், தனியான ஆட்சி நிர்வாக தேசமும் இருந்த போது பொலிஸ் அதிகாரத்தை மாகாணத்துக்கு வழங்குவது உங்களுக்கு ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை. இப்போது எமது நிலைமை கையறு கட்டம். அதனால் அந்த அதிகாரம் ஏதும் வழங்க முடியாது என்ற நிலையில் நீங்கள்...”* – என்றெல்லாம் சொல்லாம், சொல்லியிருக்கலாம் என்று மனதில் தோன்றியது.

ஆனால் அப்படி எல்லாம் பேசுவதற்கான சமய சந்தர்ப்பமாக அது இருக்கவில்லை.

சாப்பிட்டு முடித்த அவருக்கு ஒரு சின்ன டப்பாவில் சில மாத்திரைகளை ஒரு உதவியாளர் கொண்டு வந்து கொடுத்தார். அந்த வில்லைகளை வாயில் போட்டு தண்ணீர் குடிந்தவாறு அவர் புறப்பட்டார்.

உடல் பருத்திருந்தது. வயதுத் தளர்ச்சி தெரிந்தது. அவரது உடல் எடையைத் தாங்கி நடப்பதற்கு கால்கள் கஷ்டப்படுவது தெரிந்தது. நடையில் வயதால் வந்த தடுமாற்றமும், சிறிது நொண்டும் தன்மையும் தோற்றின.

எனினும் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு ‘பட், பட்’ என்று பதிலளிக்கும் அவரது வேகம் கொஞ்சமும் குறையவில்லை. உடலில் தளர்ச்சி தெரிந்தாலும் உள்ளத்தில் அதே உறுதி தோற்றியது.

அவருடனான நேற்றைய சந்திப்பின் போது எனக்கு ஒரு விடயம் நன்கு விளங்கியது.

தேர்தலின் பின்னர் நாடாளுமன்றத்தில் அவரது அரசுக்கு மூன்றில் இரண்டு பங்கு வெற்றி கிடைத்தால் அரசமைப்புத் திருத்தம் வெறுமனே 19யை நீக்குவதாக மட்டும் அமையாது. 13ஆவது திருத்தமும் கந்தர்வ கோலமாகும் என்பது நிச்சயம்.

அப்படி நடக்கும் போது வழமை போல இந்தியா பார்த்திருக்கும். அதுதான் தமிழர்களின் துன்பியல் நிலைமையாக இருக்கும்...!

–மின்னல்–

---

## ராஜபக்ஷக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களைக் கடந்து சுதந்திரக் கட்சி பொதுத் தேர்தலில் தனித்துவமான வெற்றியைப் பெற்றுக்கொள்ளும்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாச தெரிவித்தார்.

“தேர்தல் பிரசார கூட்டங்களில் சுதந்திர கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம் என்று பிரசன்ன ரணதுங்க போன்ற பொதுஜன முன்னணியின் உறுப்பினர்கள் பகிரங்கமாகவே கூறிவருகின்றனர். இது தொடர்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் சு.க. கடும் அதிருப்தியைத் தெரிவித்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

‘ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரகசியமாகப் பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றது. அது தொடர்பில் நாம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம்’ என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தெரிவித்துள்ளமை குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சஜித் தரப்பினருடனோ அல்லது வேறு தரப்பினர்களுடனோ எவ்வித இரகசியக் கூட்டணியையும் அமைக்காது. பொதுஜன முன்னணியிலுள்ள சில உறுப்பினர்கள் தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களினால் சுதந்திரக் கட்சி மீது போலியான விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இரு தரப்பினரும் பல்வேறு பேச்சுகளில் ஈடுபட்டு மூன்று ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட பின்னரே கூட்டணி அமைக்கப் பட்டது.

இப்போது எதிர்ப்பவர்கள் ஆரம்பத்தில் ஏன் அமைதியாக இருந்தனர்? இவ்வாறான விடயங்கள் குறித்து சுதந்திரக் கட்சி தனது அதிருப்தியைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வெளிப்படுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியிலுள்ள கட்சித் தலைவர்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இது போன்று பல சவால்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தாலும் அவற்றை வென்று பொதுத் தேர்தலில் தனித்துவமான வெற்றியைப் பெறுவது உறுதி – என்றார்.

---

## கிரிகெட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அப்போது எதுவித நடவடிக்கைகளையும் எடுக்காமல், இப்போது தேர்தல் நெருங்கும் சமயத்தில் ஏன் இது பற்றிப் பேசுகின்றார்கள் என்ற பிரச்சினை எனக்கும் உள்ளது. இதில் கிரிக்கெட் வீரர்கள் தொடர்புபட்டிருப்பின் விசாரணைகளை முன்னெடுப்பது சிறந்தது. அதேவேளை, இதுகுறித்து உரிய முறையில் விசாரணைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, அனைத்துக் கிரிக்கெட் வீரர்களின் பெயர்களையும் இதற்குள் நுழைத்து நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க வலியுறுத்தினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக் காரியாலயமான சிறிகொத்தாவில் நேற்று ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

இவ்விடயத்தில் அரசியல் மற்றும் விளையாட்டுத்துறை ஆகியவற்றைவிட, இதனால் நாட்டுக்கு ஏற்படும் பாதிப்பைத்தான் நான் முன்நிலைப்படுத்துகின்றேன். இதில் கிரிக்கெட் வீரர்கள் தொடர்புபட்டிருப்பின் விசாரணைகளை முன்னெடுப்பது சிறந்தது. எனினும், அதற்கென ஓர் ஒழுங்கு இருக்கின்றது.

எம்மை ஒவ்வொரு ஆணைக்குழுக்களுக்கு அழைக்கின்றார்கள். தற்போது நாட்டில் புதிதாக நடைபெறுகின்றவற்றைப் பார்க்கையில், ஒவ்வொருவரும் தமக்கு ஏற்புடைய விதத்தில் சட்டத்தைப் பயன்படுத்துகின்றார்கள். எனவே, விளையாட்டு வீரர்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும்.

அதேவேளை, எவரேனும் தவறிழைத்திருப்பின் அவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்படுவதும் முக்கியமாகும்.

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் இதுபற்றி அறிந்திருந்தால் அப்போதே விசாரணைகளை மேற்கொண்டு ஏன் இறுதி முடிவொன்றை எட்டவில்லை என்ற கேள்வி எனக்கும் உண்டு. எனினும், சந்தேகம் காணப்படுமாயின் முறையான விசாரணைகளை மேற்கொள்வதில் தவறில்லை என்றே கருதுகின்றேன்.

கிரிக்கெட் மிகவும் மோசமான நிலைக்குச் சென்றுகொண்டிருக்கிறது என்று நான் பலமுறை கூறியும், அதனைத் தடுக்கவேண்டிய தேவை எவருக்கும் இருக்கவில்லை. குறைந்தபட்சம் ஊழல்வாதிகளைக் கிரிக்கெட்டிலிருந்து விலக்குவதற்கு எமது அரசால் முடிந்தது.

யார் கிரிக்கெட் சூதாட்டக்காரர்கள் என்பது மக்களுக்குத் தெரியும். அவர்களுக்கு எதிர்வரும் பொதுத்தேர்தலில் மக்கள் சரியான பாடத்தைப் புகட்டுவார்கள் – என்றார்.

---

## கிழக்கு செயலணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இணக்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே மேற்படி இணக்கத்தைத் ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (ஓய்வுபெற்ற) மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மேற்படி ஜனாதிபதி செயலணியில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு நிபுணர்கள் விரைவில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள் என ஜனாதிபதி தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## நல்லை ஆதீன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேட்பாளர்கள் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளைச் சந்தித்து ஆசி பெற்றனர்.

இந்தச் சந்திப்பில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவரும் அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவருமான கலாநிதி ஆறு திருமுருகனும் பங்கேற்றார்.

நல்லூரில் அமைந்துள்ள நல்லை ஞானசம்பந்தர் ஆதினத்தில் இந்தச் சந்திப்பு நேற்று புதன்கிழமை இரவு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் உள்ளிட்ட வேட்பாளர்கள் பங்கேற்றனர்.

## இராவணன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இருந்தார் என்பதை நிரூபிப்பதற்கான எந்தவொரு சான்றுகளும் இல்லை. சில சான்றுகள் இருக்கின்றன என்று சிலரால் கூறப்பட்டாலும் உறுதியாகக் கூறக்கூடிய ஓலைச்சுவடிகளோ அல்லது வேறு எதுவுமோ இல்லை. இராவணன் இலங்கையை ஆண்டார் எனக் கூறப்படுவது கட்டுக்கதையாகும்.

– இவ்வாறு தொல்பொருள் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இராவணன் தொடர்பில் இந்தியாவில் எழுதப்பட்ட ராமாயணம், மகாபாரதம் போன்ற சாகித்திய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும், இலங்கையில் இராவணன் என்ற மன்னன் இருந்தான் என்பதை நிரூபிப்பதற்கான எந்தவொரு சான்றுகளும் இல்லை. சில சான்றுகள் இருக்கின்றன என்று சிலரால் கூறப்பட்டாலும் உறுதியாகக் கூறக்கூடிய ஓலைச் சுவடிகளோ அல்லது வேறு எதுவுமோ இல்லை. இராவணன் இலங்கையை ஆண்டான் எனக் கூறப்படுவது கட்டுக்கதையாகும்.

தொல்பொருள் என்பதற்கு இனம், மதம், மொழி பாகுபாடு கிடையாது. தொல்பொருள் இருந்தால் அது அந்நாட்டில் வாழும் அனைத்து மக்களினதும் உரிமையாகும். கிழக்கிலுள்ள தொல்பொருள்களும் அப்படிதான். அனைவரும் அவற்றை பாதுகாக்கவேண்டும். தமிழர்களின் பாரம்பரியங்கள் அழிக்கப்படும், அடையாளம் மறைக்கப்படும் என்றெல்லாம் கூறப்படுவது தவறான விடயமாகும். செயலணிக்கு சிறுபான்மையினத்தை சேர்ந்தவர்கள் நியமிக்கப்படவில்லை என்ற வாதமும் ஏற்புடையதாக அமையவில்லை. நாம் அறிக்கை வழங்கியதும் அவை பாதுகாக்கப்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான் தமிழ், சிங்கள மக்களிடையே பிரச்சினைகளை உருவாக்குகின்றது. குறிப்பாக தமிழ் மக்களுக்காக கூட்டமைப்பு உருப்படியாக எதனையும் செய்யவில்லை. அரசாலேயே அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டன. பொய்யுரைத்து – இனவாதத்தைப் பரப்புவதே அவர்களின் அரசியலாகும்.

அரசியல் தீர்வு, அதிகாரப் பகிர்வு போன்ற விடயங்களால் நாட்டில் மேலும் பிரச்சினைகள் உருவாகும். பிரிவினை ஏற்படலாம். எனவே, அனைவரும் ஐக்கியமாக வாழும் நிலை இருந்தால் போதும் – என்றார்.

---

## பிரச்சாரத்துக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிர்வாக சேவை மீதும் அதன் அதிகாரிகள் மீதும் இருந்த நம்பிக்கையை இல்லாது செய்யும் வகையில் செயற்படும் இந்த அரசு, நிர்வாக சேவைகளுக்கு தொடர்ச்சியாக இராணுவ நியமனங்களை வழங்கி வருகின்றது.

எமது ஆட்சியின் கீழ் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டது. ஏனைய கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்பட்டதுடன் சுயாதீனமாக வேலை செய்யக்கூடிய சுதந்திரமும் இருந்தது. ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டது. பக்கம் 11 »

---

## தரம் 01, 02...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதற்கு, கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அத்துடன், கடந்த மார்ச் 16ஆம் திகதி முதல் மூடப்பட்ட அனைத்து கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகளையும் ஜூலை 07ஆம் திகதி ஆரம்பிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கல்வி நிறுவனங்களை மீண்டும் திறந்து, அவற்றை மாணவர்களுக்கு வழங்குவது குறித்து நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இடம்பெற்ற மிக நீண்ட கலந்துரையாடலை அடுத்து, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பக்கம் 11 »

# தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிப்பதற்கு ஐ.தே.கவினரும் அரசின் முகவர்களாகக் குதிப்பு

## மனோ கணேசன் கடும் குற்றச்சாட்டு

(பிரபாகரன் டிலக்சன்)

**ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினரும் தமிழர்கள் சிறுபான்மையினராகவுள்ள பிரதேசங்களில் அரசின் முகவர்களாகச் செயற்பட்டு தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடித்து வருகின்றனர்.**



– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

சமகால அரசியல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கொழும்பிபிள்ள தமிழ் வாக்காளர்கள் அர்ஜுனனைப் போன்றவர்கள். அர்ஜுனனின் கண்ணுக்கு எவ்வாறு இலக்கு மட்டும் தெரியுமோ அதுபோல் கொழும்பில் வாழும் தமிழர்களும் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் என்னையும் என் கட்சி சார்பில் போட்டியிடும் ஜனகனையும்தான் நோக்குவார்கள். எக்காரணம் கொண்டும் மாற்று அணியினருக்குக் கொழும்பிலுள்ள தமிழ் வாக்காளர்கள் வாக்களிக்கத் தயாராக இல்லை. மாற்று அணியின் வேட்பாளர்களை ஒப்பந்ததாரர்களாவே அவர்கள் பார்க்கின்றனர்

யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, நுவரெலியா ஆகிய தேர்தல் மாவட்டங்கள் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழக்கூடிய மாவட்டங்களாகும். இந்த மாவட்டங்களில் வாக்குகளைச் சிதறடிக்கும் நோக்குடன் பல கட்சிகள் போட்டியிட்டாலும் அந்தத் தேர்தல் மாவட்டங்களிலும் தமிழர்களே தெரிவுசெய்யப்படக்கூடிய சந்தர்ப்பம் அதிகமாகவுள்ளது. இங்கு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இலகுவில் இல்லாமல் செய்துவிட முடியாது. ஆனால், திருகோணமலை, கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, கேகாலை, கண்டி, பதுளை, அம்பாறை போன்ற மாவட்டங்களில் தமிழர்கள் சிறுபான்மையினராக வாழ்கின்றனர். இங்கு தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடித்து தமிழ் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்துவிட வேண்டும் என்று அரசு சதித்திட்டங்களைமேற்கொண்டு வருகின்றது. இந்தச் சதித்திட்டங்களில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.கவினரும் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் அரசின் முகவர்களாக செயற்பட்டு தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடித்து வருகின்றனர்.


மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கக்கூடிய கட்சிகளுக்கு வாக்களிக்காது வெற்றிபெறுவதற்கான சாத்தியப்பாட்டை உடைய கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் வாக்களிக்க வேண்டும். இதன் மூலமே தமிழ் பிரதிநிதித்துவங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படும் அனைத்துத் தமிழர்களையும் இணைத்து தமிழ் நாடாளுமன்ற ஒன்றியமாகச் செயற்பட வேண்டும் எனப் பலவருடங்களுக்கு முன்னரே தெரிவித்திருந்தேன். இந்தத் திட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் உடன்பாடு தெரிவித்திருந்தாலும் கட்சியாக ஒருமித்த முடிவை எடுப்பதற்குப் பின்னடித்தனர்.

எதிர்வரும் காலங்களிலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி, பிரதேச பேதங்களை மறந்து, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் செயற்பட வேண்டும். அமெரிக்காவில் கறுப்பு இனத்தைச் சார்ந்த காங்கிரஸ் உறுப்பினர்கள் 'கறுப்பு இனத்தவர்களின் காங்கிரஸ் ஒன்றியம்' ஆகச் செயற்பட்டு வருகின்றனர். அவர்களைப் போல் நாமும் ஒன்றிணைய வேண்டும். இந்த முயற்சியில் கடந்த காலங்களில் தோற்றுப்போயிருந்தாலும் எதிர்வரும் தேர்தலின் பின் அமையவுள்ள நாடாளுமன்றத்திலும் இந்த முயற்சியைத் தொடருவேன் – என்றார்.

# அபிவிருத்திகளுக்காக மட்டும் கூட்டமைப்பு உருவாகவில்லை

## கூறுகின்றார் அரியநேத்திரன்



மட்டக்களப்பு, ஜூலை 01

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2001 ஆம் ஆண்டு தேசியதலை வர் பிரபாகரனின் வழிப்படுத்தலில் உருவாக்கப்பட்டது அபிவிருத் திகளைமட்டும் செய்வதற்கல்ல தமிழ்தேசிய உறுதியுடன் வடகிழக்கு தமிழ் மக்களின் உரிமையையும் வென்றெடுப்பதற்கே என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பட்டிருப்பு தொகுதி இலங்கை தமிழரசு கட்சி தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பின் சார்பாக 6 ஆம் இலக்கத்தில் வேட்பாளராக போட்டியிடும் மாணிக்கம் உதயகுமார் அவர்களின் பிரசார அலுவலகம் திறப்பு நிகழ்வு நேற்று மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினரும் மண்முனை வடக்கு இலங்கை தமிழரசு கட்சிக் கிளை தலைவருமான வேலிப்பிள்ளை தவராசா தலைமையில் இடம்பெற்றது.

அந்த கூட்டத்தில் அவர் மேலும் கூறுகையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2001 உருவாக்குவதற்கு உந்து சக்தியாக மட்டக்களப்பு கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தில் ஊடாக நானும் பங்பேற்றவன் என்ற அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் உருவாக்கப்பட்டது என்பது எனக்கு நன்கு தெரியும்.

தமிழ்தேசிய்கொள்கையுடன் எமது விடுதலையை வென்றெடுக்கும் அரசியல் சக்தியாக செயல்படுவதே முதலாவது நோக்கம் அந்த நோக்கத்தில் இருந்து எள்ளளவும் விலகாமல் ஏனைய அபிவிருத்தி சார்ந்த விடயங்களை மேற்கொள்வதும் எமது கடமையாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை தேர்தலில் 16,அரசியல் கட்சிகளும், 22, சுயேச்சைக் குழுக்களுமாக 38, குழுக்களைச் சேர்ந்த 304, வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள் இவர்களில் 174, முஷ்லிம்களும் 107, தமிழரும் 23, சிங்களவரும் அடங்குவர்.

தமிழ்வாக்குகளை சிதறடிப்பதற்காகவே இவ்வாறான வேட்பாளர்பளும் கட்சிகளும் பெரும் எண்ணிக்கையில் இறக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 3,13,000, தமிழ் வாக்காளர்களும், 93,000 முஸ்லிம் வாக்காளர்களும் சொற்ப அளவாக சிங்கள வாக்காளர்களுமாக 4,09,077, வாக்காளர்கள் உள்ளனர்.

இலங்கை தேர்தல் வரலாற்றில் 2004 ஆம் ஆண்டு மட்டுமே மட்டக்களப்பு மாவட்டத்தில் 4, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மெறமுடிந்தது. அதற்கு காரணம் தமிழ் மக்கள் எல்லோரும் ஒரே கொள்கையுடன் இலட்சியத்துக்காக ஒன்றினைந்து வீட்டுச்சின்னத்திற்கு வாக்களித்தமையே இதற்குக் காரணம்.

2004ஆம் ஆண்டு போல் இந்த முறையும் தமிழ்மக்கள் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மட்டும் அதன் சின்னமான வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிப்போமானால் கட்டாயம் நான்கு தமிழ் உறுப்பினர்களை நாம் பெறமுடியும். இதனை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும் – என்றார்.


## மரண அறிவித்தல்

தோற்றம்
23 – 08 – 1969

மறைவு
30 – 06 – 2020



### செல்வி Dr. வினோதினி சண்முகலிங்கம்

(யாழ் போதனா வைத்தியசாலை, நிர்வாக இயக்குநர் நோர்தேன் இண்டஸ்ரீஸ், யாழ்ப்பாணம்.)

இல. 43 பிறவுண் வீதி, நீராவியடி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி Dr. வினோதினி சண்முகலிங்கம் 30.06.2020 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுருவில் தம்பியப்பா சண்முகலிங்கம், ராசலெட்சுமி தம்பதியரின் பாசமிகு மகளும், சுபோதினி, சுபேந்திரன், Dr. நந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலாம்பிகையின் மைத்துனியும், சத்தியனின் பாசமிகு மாமியாரும், மாணிக்கவாசகன், காலஞ்சென்ற சபாநாதன் மற்றும் சிவநாதன், உலகநாதன் ஆகியோரின் பாசமிகு பெறாமகளும், நாகேஸ்வரியின் மருமகளும், காலஞ்சென்ற Dr. ராசலிங்கம் மற்றும் சிவலிங்கம், காலஞ்சென்ற சிறீஸ்கந்தராஜா, அருள்கந்த ராஜன், நவநீதராஜன் ஆகியோரின் அருமை மருமகளும், மகாலெட்சுமி, காலஞ்சென்ற ஆனந்தலெட்சுமி மற்றும் சந்திரமதி ஆகியோரின் ஆசை பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.07.2020 வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மாலை 4.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குற்றாலம்
43, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழ்ப் பிரதிநிதிகள் சேர்ந்து செயற்பட வேண்டிய கட்டாயம்

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் இச்சமயத்தில் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராகப் போட்டியிடும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஒரு முக்கிய கருத்தை முன்வைத்திருக்கின்றார்.

நீண்ட காலமாகப் பாதிக்கப்பட்ட சிறுபான்மையினருக்காகத் தலைநகரிலிருந்து குரல் எழுப்பி வருபவர் மனோ கணேசன்.

2005 - 2015 இருண்ட யுகக் காலப்பகுதியில் தனி மனிதராகக் கொழும்பில் அவர் ஆற்றிய பணி போற்றுதலுக்குரியது. கடும் உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் மனித உரிமைகளுக்காக சளைக்காது குரல் எழுப்பியவர் அவர்.

*"நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படும் அனைத்துத் தமிழர்களையும் இணைத்துத் தமிழ் நாடாளுமன்ற ஒன்றியமாகச் செயற்பட வேண்டும் எனப் பல வருடங்களுக்கு முன்னரே தெரிவித்திருந்தேன். இந்தத் திட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் உடன்பாடு தெரிவித்திருந்தாலும் கட்சியாக ஒருமித்து ஒரு முடிவை எடுப்பதற்குப் பின்னடித்தனர்.*

*"எதிர்வரும் காலங்களிலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி, பிரதேச பேதங்களை மறந்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற ரீதியின்றுபட்டுச் செயற்பட வேண்டும்"* - என்று மனோ கணேசன் கூறியிருக்கின்றார்.

இது தொடர்பில் முன்னுதாரணம் ஒன்றையும் அவர் காட்டியிருக்கின்றார்.

*"அமெரிக்காவில் கறுப்பு இனத்தைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர்கள் 'கறுப்பு இனத்தவர்களின் காங்கிரஸ் ஒன்றியம்' ஆகச் செயற்பட்டு வருகின்றனர். அவர்களைப் போல நாமும் ஒன்றிணைய வேண்டும். இந்த முயற்சியில் கடந்த காலங்களில் தோற்றுப் போயிருந்தாலும் எதிர்வரும் தேர்தலின் பின் அமையவுள்ள நாடாளுமன்றத்திலும் இந்த முயற்சியைத் தொடருவேன்"* என்று கூறியிருக்கின்றார்.

மனோ கணேசன் சுட்டிக்காட்டிய விவகாரத்தில் இரண்டு விடயங்கள் உள்ளன.

முதலாவது - இப்படித் தமிழ்ப் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து செயற்பட வேண்டிய தேவை - கட்டாயம் - அவசரம் - இருப்பது.

அடுத்தது - அந்த முயற்சி இதுவரைத் தோற்றுப் போனமைக்கு அல்லது செயற்படுத்த முடியாது போனமைக்கான காரணம்.

இத்தகைய ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என அந்தச் சமயத்திலேயே இப்பத்தியில் வலியுறுத்தியிருந்தோம்.

மனோ கணேசன் கூறியமை போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இத்தகைய கட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படுவதன் அவசியத்தை உணர்ந்திருந்த போதிலும், கட்சி ரீதியாக அத்தகைய செயற்பாட்டுக்கு இணங்கவில்லை என்பது கடந்த காலத்தின் உண்மை நிலைவரம்தான்.

கடந்த நாடாளுமன்றத்தில் தமிழ்ப் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றால் எல்லாத் தரப்புகளிலும் இருந்தவர்களையும் சேர்ந்து நாற்பத்தி இரண்டு பேர் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் எனத் தமிழ்ப் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணையும் போது அது கிட்டத்தட்ட மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஐந்தில் ஒன்றாக அமையும் வாய்ப்புண்டு.

பௌத்த, சிங்களப் பேரினவாத வீச்சத்துடன் ராஜபக்ஷக்களின் ஆட்சி நிலை பெறக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகையில் சிறுபான்மையினர்களின் பிரதிநிதிகள் தமக்குள் ஒன்றுபடுவதும் ஒற்றுமைப்பட்டுச் செயற்பட இணங்குவதும் காலத்தின் கட்டாயமாகும்.

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டு அரசமைப்புத் திருத்தங்களைச் செய்ய வேண்டும் எனத் துடியாய்த் துடிக்கின்றது மொட்டுத் தரப்பு.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை மாற்றுவதையும் தாண்டி, ஒரு கொஞ்ச நஞ்சமேனும் அதிகாரப் பகிர்வுக்கு இடமளித்துள்ள அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தையும் தூக்கிக் கடாச ராஜபக்ஷ ஆட்சிப் பீடம் எண்ணங்கொண்டுள்ளது என்ற தகவல்களும் உள்ளன.

போதாக்குறைக்கு தேர்தலின் பின்னர் வரக் கூடிய ராஜபக்ஷக்களின் நிர்வாகம் நாட்டை மேலும் இராணுவமயப்படுத்தலுக்குள் ஆழ்த்தலாம் என்ற பேரச்சமும் நிலவுகின்றது.

இத்தகைய நடவடிக்கைகள் கட்டவிழும்போது பெரிதும் பாதிக்கப்படப் போகின்ற முதல் தரப்பாக சிறுபான்மை மக்களே இருப்பர் என்பதும் தெளிவு.

எனவே அத்தகைய நெருக்கடிகளை எதிர்கொள்வதற்காக சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகள் ஐக்கியப்பட்டு நிற்பது சரித்திரத் தேவையாகும். அப்படி இணைவதன் மூலம் மாற்றுக் கட்சியின் மக்கள் பிரதிநிதிக்கு அங்கீகாரம் அளிப்பதா என்ற குறுகிய சிந்தனையை விட்டு வெளியே வந்து, சிறுபான்மை மக்களின் நலன் என்ற பரந்த எண்ணத்துடன் இதனை அணுக வேண்டும்.

# மட்டக்களப்பில் கூட்டமைப்புக்கு 4 ஆசனங்கள் என்பது பகல் கனவு

## 'மொட்டு'வின் வேட்பாளர் கூறுகின்றார்




இம்முறை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 ஆசனங்களைப் பெறுவோம் எனப் பகல் கனவு கண்டு கொக்கரிக்கின்றது. அது ஒரு நாளும் நடக்காது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தமிழ் மக்களை சுயகௌரவத்துடன் வாழவைக்க வேண்டும் எனும் எண்ணம் துளியளவும் இல்லை.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் ப.சந்திரகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

மட்டக்களப்பு மாவட்டத்தின் புள்ளிவிவரத் தரவுகள் தெரியாத அரசியல்வாதிகளை மட்டக்களப்பு மக்கள் வாக்களித்து தெரிவு செய்திருக்கின்றார்கள் என்பது கவலையளிக்கின்றது. இவ்வாறான தவறுகளை தமிழ் மக்கள் இனியும் விடக் கூடாது. இப்போது தேர்தல் காலமாகும். இத் தேர்தலுக்கு தமிழ் மக்களின் இல்லங்களை நாடிவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், ஆதரவாளர்கள் 5 ஆண்டுகள் கடந்து மீண்டும் உங்களிடம் வாக்குச் சேகரிக்க வருவார்கள்.

இதனைத் தமிழ் மக்கள் யதார்த்தமாக உணர்ந்து செயற்பட வேண்டும். இதனை உணராவிட்டால் தமிழ் பிரதேச அபிவிருத்திகள், பட்டம் பெற்ற பட்டதாரிகள், படித்த இளைஞர், யுவதிகளின் வேலை வாய்ப்பு போன்ற பல விடயங்களை மாற்றுச் சமூகம் அனுபவிப்பதை தமிழ் மக்கள் பார்த்து கொட்டாவி விடக்கூடாது.

இம்முறை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 ஆசனங்களைப் பெறுவோம் எனப் பகல் கனவு கண்டு கொக்கரிக்கின்றது. அது ஒருநாளும் நடக்காது. வெற்றுக்கோத்தையும், உணர்ச்சி ஊட்டும் செயற்பாட்டை செய்யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போலி தாரக மந்திரங்களை தமிழ் மக்கள் உணர்ந்து விட்டார்கள். மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கரங்களைப் பலப்படுத்துவார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு படுதோல்வியைச் சந்திக்கும் – என்றார்.

## யான் ஓயாவில் தவறி விழுந்து ஒருவர் சாவு

புல்மோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலன்குளம் பிரதேசத்தில் யான் ஓயாவினை பார்வையிட வந்த நபரொருவர் கால் வழுக்கி ஓயாவில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

ஓயாவில் விழுந்த நபரை மீட்டு புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதித்துள்ள நிலையில் அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

25 வயதுடைய உயிரிழந்த நபர் நிந்தவூர் பிரதேசத்தை சேர்ந்தவராவார். சடலம் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# மக்களுக்கு வாக்குறுதிகளை மட்டும் வழங்கி இனி வாக்கு பெறமுடியாது

## நிலைமை மாறிவிட்டது என்கிறார் சந்திரகுமார்



கிளிநொச்சி, ஜூலை 02

மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்கு எதனையும் செய்யாது வெறும் வாக்குறுதிகளை மட்டும் வழங்கிவாக்குக்களைப்பெற்று பதவிகளுக்கு வரலாம் என்ற நிலைமை மாறிவிட்டது என கேடயச் சின்னத்தில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி செல்வாநகர் கிராமத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மக்களிடம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களிடம் வெறும் வாக்குறுதிகளை மட்டுமே வழங்கி கடந்த காலங்களில் வாக்குகளை பெற்று வந்துள்ளனர். ஆனால் அந்த நிலைமை இன்று மாறிவிட்டது. ஒவ்வொரு வருடமும் இந்த வருடத்திற்குள் தீர்வு, தைபொங்கலுக்குள் தீர்வு, தீபாவளிக்குள் தீர்வு, இந்த வருடத்துக்குள் சர்வதேச விசாரணை எனக் காலம் காலமாக மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்று வந்துள்ளனர். ஆனால் அது எதுவுமே நடக்கவில்லை. அதற்குரிய முயற்சிகளை இவர்கள் இதய சுத்தியுடன் மேற்கொள்ளவில்லை. இதனை இன்று மக்கள் நன்குணர்நதுள்ளனர்.

ஒவ்வொரு தேர்தலிலும் மக்கள் முன் வரும் இவர்கள் சர்வதேசத்திற்கு ஒற்றுமையை காட்ட, பேரம் பேசும் சக்தியை வலுப்படுத்த தங்களுக்கு வாக்களியுங்கள் என்றவர்கள் வாக்குகளை பெற்ற பின்னர் மக்களை மறந்துவிட்டு தங்களின் சுகபோகங்களுக்கு பேரம் பேசுகின்ற கைகரியங்களில் மிகச் சிறப்பாக ஈடுப்பட்டு தங்களை அனைத்து வழிகளிலும் பலப்படுத்திக்கொண்டனர்.

கடந்த நான்கரை ஆண்டுகளாக அரசின் பங்காளியாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் தங்களது நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை தமிழ் மக்களின் நலன்களிலிருந்து பேரம் பேசியிருந்தால் பல விடயங்களை சாதித்திருக்கலாம். தொழின்றி பெரும் நெருக்கடிக்குள் உள்ள எம் இளம் சமூகத்தின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம் ஆனால் அவர்கள் எதனையும் செய்யவில்லை. இந்த நல்லாட்சி என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவோடு நடந்த ஆட்சியிதான் எங்கள் பிரதேசங்களில் அதிகரித்த வன்முறைகள் நிறைந்த காலமாகவும், தமிழ் மக்களின் வரலாற்று இடங்கள் அதிகளவில் ஆக்கிரமிக்கப்பட்ட காலமாகவும், அதிகளவான தென்னிலங்களை இளைஞர்கள் வடக்கில் வேலை வாய்ப்பை பெற்ற காலமாகவும் காணப்பட்டுள்ளது.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரை அவர்கள் தமிழ் மக்களுக்கு மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்வதற்கு பொருத்தமற்றவர்கள். மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்வதற்கு தகுதியற்றவர்கள் எனவே இவர்களை நம்பி இனியும் மக்கள் ஏமாந்துவிடக் கூடாது. ஆகவே கடந்த காலத்தில் நாம் செய்த எமது பணிகளையும், கடந்த காலத்தில் அவர்கள் மக்களுக்கு செய்த பணிகளையும் சீர்தூக்கி பார்த்து இந்த தேர்தலில் மக்கள் வாக்களிக்க வேண்டும் – என்றார்.

# ஆயுதக்குழுவின் அச்சுறுத்தலினாலேயே நாட்டைவிட்டு வெளியேறினர் எம்.பிக்கள்

## ரெமிடியஸின் கருத்துக்கு மணிவண்ணன் பதிலடி

(பிரபாகரன் டிலக்சன்)

**போர்க் காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கையை விட்டு வெளியேறியமைக்கு ஈ.பி.டி.பி. போன்ற ஆயுதக்குழுவினரே காரணம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் குற்றம் சுமத்தியுள்ளார்.**

இறுதிப்போரின்போது இங்கிலாந்தில் இருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினரை நிராகரிக்க வேண்டும் என்ற ஈ.பி.டி.பியின் யாழ். மாநகரசபை முன்னாள் உறுப்பினர் ரெமிடியஸின் கருத்துத் தொடர்பில் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் இறுதிப்போர் இடம்பெற்றபோது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இலங்கையில்தான் இருந்தார். போர் பிரதேசத்தில் அகப்பட்ட மக்களை மீட்பதற்கான தன்னாலான அனைத்து முயற்சிகளையும் அவர் மேற்கொண்டிருந்தார். எனினும், அந்த முயற்சியில் வெற்றி பெறமுடியவில்லை.

இறுதிப்போரில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக சர்வதேச மட்டத்தில் பல்வேறு சாட்சியங்களை அவர் வழங்கியுள்ளார். எனவே, இறுதிப்போரின்போது கஜேந்திரகுமார் நாட்டில் இல்லை என்று ரெமிடியஸ் குறிப்பிட்டது முற்றிலும் பொய்யான செய்தியாகும்.

போர் உக்கிரமாக இடம்பெற்ற காலப்பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ரவிராஜ், சிவநேசன், ஜோசப் பரராஜசிங்கம், சிவமகாராசா ஆகிய நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆயுதக்குழுக்களினால் படுகொலை செய்யப்பட்டனர். அப்போது இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் இருந்தது. அதன் காரணமாகப் பலர் நாட்டில் இருக்கவில்லை.

இந்தப் படுகொலைகளுக்குப் பின்னால் யாழ்ப்பாணத்தில் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பியினரும், வவுனியாவில் சித்தார்த்தன் தலைமையிலான புளொட் அமைப்பினரும், கிழக்கில் கருணா மற்றும் பிள்ளையான் ஆகியோர் தலைமையிலான ஆயுதக் குழுவினரும் சம்பந்தப்பட்டிருக்கின்றனர். இவர்கள் மீது பரவலாக குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.



இவ்வாறான படுகொலைகளை அரசுடன் இணைந்து மேற்கொண்டமையால் இவர்கள் மீது இதுவரை எதுவித விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை. அதனாலேயே நாங்கள் உள்ளக விசாரணை மேல் நம்பிக்கை இல்லாமல் சர்வதேசத்தின் உதவியை நாடுகின்றோம் - என்றார்.

# வடக்கில் வெடிப்புச் சம்பவம்: சந்தேகத்திலேயே கைதுகள்!

## இப்படிச் சொல்கின்றார் பொலிஸ் பேச்சாளர்



வடக்கில் சில இடங்களில் வெடிபொருள்கள் அண்மையில் வெடித்துள்ளன. சில இடங்களிலிருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் சந்தேகத்தில் கைதுகள் இடம்பெற்றுள்ளன. எத்தனை பேர் கைதுசெய்யப்பட்டார்கள் என்ற விவரத்தை இப்போது கூற முடியாது.

- இவ்வாறு பொலிஸ் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கைதுசெய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்கள் வழங்கும் தகவல்களுக்கு அமைவாக மேலும் சிலர் கைது செய்யப்படுகின்றனர். இவர்களில் பலர் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளை மீள் உருவாக்கம் செய்ய முற்பட்ட குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டார்களா என்பதை விசாரணைகளின் பின்னரே கூற முடியும். பயங் கரவாதத் தடுப்புப் பிரிவினரும், பொலிஸாரும் இணைந்து இந்த விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் - என்றார்.

# பெண்களின் நாதஸ்வரம், தவிலை ஆச்சரியத்துடன் நோக்கிய சஜித்

(பிரபாகரன் டிலக்சன்)



பெண் நாதஸ்வர, தவில் வித்துவான்களை ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம வேட்பாளர் சஜித் பிரேமதாஸ ஆச்சரியத்துடன் நோக்கினார்.

தேர்தல் பிரச்சாரங்களிற்காக வடக்கிற்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்ட சஜித் பிரேமதாஸவுக்கு யாழ் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் மங்கள வாத்தியங்கள் முழங்க தமிழர் முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதில் நதஸ்வரம் மற்றும் தவில் இசைக்கருவிகளை பெண்கள் இசைப்பதனை ஆச்சரியத்துடன் பார்த்தார். சில செக்கன்கள் பெண்களின் நாதஸ்வர தவில் இசையை ரசித்தவராக மேடைக்கு ஏறினார். (ம – 11)

# கிழக்கில் தமிழரின் இருப்பை தக்கவைக்க கூட்டமைப்புக்கே வாக்களிக்க வேண்டும்

## இப்படிச் சொல்கிறார் அதன் வேட்பாளர்

(க.விஜயரெத்தினம்)

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் இருப்பைத் தக்க வைப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் வேட்பாளர் ஞானப்பிரகாசம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் பொறியியலாளர் ஞானபிரகாசம் ஊடகச் சந்திப்பு செவ்வாய்கிழமை மாலை 7.00 மணியளவில் மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் ஒரணியில் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும். இப்போது பேரினவாத சக்திகளின் செயற்பாடு காரணமாக கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் இருப்பு பறிபோகும் நிலை காணப்படுகின்றது. தமிழ் மக்களின் கல்வி, இருப்பு, பண்பாடு, கலாசாரம் முறையாகப் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வாக்குகளால் பலப்படுத்த வேண்டும்.

பேரினவாதக் கட்சிகள் தமிழ்ப் பெயரில் கட்சிகளை உருவாக்கி அதற்குள்ளேயே தமிழ் என்ற பெயரைச் சொருகி தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிப்பதற்குத் தமிழ் மக்களுக்கு படுகுழி வெட்டியிருக்கின்றார்கள். அக்குழிக்குள் தமிழ் மக்கள் வீழ்ந்து விடக்கூடாது.

நாம் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நூறு வீதம் வாக்களிக்க வேண்டும். மாற்றுக் கட்சிக்கு வாக்களித்தால் நாம் எமது வரலாற்றை இழக்கநேரி



டும். தமிழ் மக்களுக்குரிய கட்சி தமிழ் கட்சியாகும். இப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலமிழக்கச் செய்யும் செயற்பாட்டில் சில்லறைக் கட்சிகள் களமிறக்கப்பட்டுள்ளன. அவற்றைப் புறக்கணித்து கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள் என்றார் அவர்.

# சஜித்தின் நேற்றைய பிரசாரக் கூட்டத்தில் மின் தடைப்பட்டது

(பிரபாகரன் டிலக்சன்)

சஜித் பிரேமதாஸ கலந்து கொண்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நேற்றைய யாழ் பிரசாரக் கூட்டத்தில் மின்சாரம் தடைப்பட்டது.

யாழ் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டத்திலேயே இடையில் மின்சாரம் தடைப்பட்டது.

தெற்கில் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டங்களில் மின்சாரம் தடைப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் ஷர்ஷ டீ சில்வா குற்றம் சுமத்தியிருந்த நிலையில் யாழிலும் மின்சாரம் தடைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம –11)

காலைக்கதிர் Kalaikkathir





# நெய்வேலி அனல்மின் நிலையத்தில் அடுத்தடுத்துத் தீ விபத்துகள்!

இந்தியாவின் கடலூர் மாவட்டம் நெய்வேலி என்.எல்.சி இரண்டாவது அனல்மின் நிலையத்தில் 5ஆவது பிரிவில் உள்ள கொதிகலனில் பயங்கரத் தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் தீ விபத்தில், ஒப்பந்த ஊழியர்கள் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 17 பேர் பலத்த காயங்களுக்குள்ளா கினர். அவர்கள் சென்னை அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தீ விபத்து ஏற்பட்ட அனல்மின் நிலையப் பகுதிகளில் மீட்புப் பணியில் மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர், தீயணைப்பு பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். மீட்புப் பணிகள் முழுமை அடைந்த பிறகே எத்தனை தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள் ளனர் என்பது தெரியவரும் எனக் கூறப்படுகிறது.

இந்தத் தீ விபத்தைத் தொடர்ந்து இரண்டாவது அனல்மின் நிலையத்தில் மின் உற்பத்தி முழுவதும் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், உயிரிழந்தவர்களின் உடலை வெளியே எடுத்துச் செல்லக்கூடாது என்று தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும், உறவினர்கள் மற்றும் பொலிஸார் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு வருவதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, இரண்டாவது அனல்மின் நிலையத்தில் பொலிஸார் அவ்விடத்தில் குவிக்கப்பட்டுள்ளனர்.

தொடர் விபத்துகள்

கடந்த மே மாதம் 7ஆம் திகதியன்று நெய்வேலியில் இரண்டாவது அனல்மின் நிலையத்திலிருந்த 6ஆவது பிரி வில் ஏற்பட்ட தீ விபத்து 5 நபர்கள் உயிரிழந்தனர். கடந்த இரண்டு மாதத்தில் மூன்றாவது முறையாக என்.எல்.சி நிறு வனத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# சாத்தான்குளம் விவகாரம் விசாரணைகள் ஆரம்பம்

சாத்தான்குளம் பொலிஸ் நிலையத்தில் தந்தையும் மகனும் அடுத்தடுத்து உயிரிழந்த விவகாரம் தொடர் பாகக் குற்றப் பிரிவுக் குற்றப் புலனாய்வுத் துறையின் விசாரணை நேற்றுக் காலை ஆரம்பித்தது. நீதித் துறை நடுவர் வாக்குமூலங்களைப் பதிவுசெய்தார்.

சாத்தான் குளம் சம்பவம் தொடர்பான விசார ணையை மத்திய புலனாய்வுத் துறைக்கு மாற்றுவ தற்கு மாநில அரசு பரிந்துரைத்திருக்கிறது. ஆனால், சி.பி.ஐ. தனது விசாரணையை ஆரம்பிப்பதற்கு நாள்கள் ஆகும் என்பதால், அதற்கு முன்பாகவே குற்றப் பிரிவுக் குற்றப் புலனாய்வுத் துறை (சி.பி.சி.ஐ.டி) தனது விசாரணையை ஆரம்பிக்கலாம் என்று சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை உத் தரவிட்டது.




இதையடுத்து சி.பி.சி.ஐ.டி. தனது விசாரணையை ஆரம்பித்தது. சாத்தான் குளம் பொலிஸ் நிலையத் துக்கு இதுகுறித்த விசாரணைக்குச் சென்ற நீதி வானுக்குப் பொலிஸார் ஒத்துழைக்காது அவரை அவமதித்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# லடாக் ஏரியில் இந்தியா ரோந்து!

எல்லைப் பிரச்சினைக ளுக்கு மத்தியில் லடாக் ஏரி யில் கண்காணிப்புப் பணி யில் ஈடுபடுவதற்குச் சக்தி வாய்ந்த படகுகளை அந்தப் பகுதிக்கு இந்தியா அனுப்பி யுள்ளது என்று தெரிவிக்கப் படுகிறது. லடாக்கின் கிழக்கே பங்கோங்சோ ஏரி, கல்வான் பள்ளத்தாக்கு, டெம்சோக் உள்ளிட்ட பகுதிகளில் சீன இராணுவத்துக்கும் இந்திய இராணுவத்துக்கும் இடையே முறுகல் நிலை நீடித்து வரு வதால், இரு தரப்பிலும் எல் லையில் படைகள் குவிக்கப் பட்டன.

மறுபுறம் இந்தப் பதற் றத்தை முடிவுக்கு கொண்டு வரும்வகையில் இருதரப்பும் தொடர்பேச்சில் ஈடுபட்டுவரு கின்றன. இந்த நிலையில் இந்தியக் கடற்படை உயர் ஆற்றல் கொண்ட, கண்கா ணிப்புக் கமரா பொருத்தப் பட்ட படகுகளை லடாக்குக்கு அனுப்பவுள்ளது என்று தெரி விக்கப்பட்டது.

இதனால் இந்திய இரா ணுவம் லடாக் ஏரியில் கண் காணிப்பில் ஈடுபடவிருக்கின் றது. கிழக்கு லடாக்கில் பங் கோங்சோ ஏரிப் பகுதி சீனா இராணுவத்தின் கட்டுப்பாட் டின் கீழ் உள்ளமை குறிப் பிடத்தக்கது.



# தொழிலாளர்களின் பாதுகாப்புக்கு பொறுப்பேற்க வேண்டியது நிறுவனம்



ஸ்டாலின் தெரிவிப்பு

நெய்வேலி அனல்மின் நிலைய நிர்வாகத்தின் மெத் தனப் போக்காலேயே கொதிகலன் வெடித்து விபத்து ஏற்பட்டது என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் குற் றம்சாட்டியுள்ளார். இதுதொடர்பாக ஸ்டாலின் மேலும் தெரிவிக்கையில், நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் இரண்டாவது அனல்மின் நிலையத்தில் கொதிகலன் வெடித்து ஆறு தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். 17 பேர் காயமடைந்துள்ளனர். இன்னும் பல தொழி லாளர்கள் உள்ளே சிக்கியுள்ளதாகவும் அவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால், பாதிப்பு அதிகரிக்கக்கூடும் என அஞ்சப் படுகிறது. இந்திய அளவில் உள்ள மிகப்பெரிய நிறு வனங்களில் ஒன்றான நெய்வேலி நிலக்கரி நிறுவனத் தின் பாதுகாப்பு என்பது மிக மிக மோசமான நிலைமை யில் இருப்பதை இந்த விபத்து உணர்த்துகிறது.

தொடர்ந்து, உரிய காலத்தில் பராமரிப்பு செய்யப் படாததும், புதுப்பிக்கப்படாததும்தான் இதற்குக் கார ணம் என்று சொல்லப்படுகிறது. நெய்வேலி நிர்வாகத் தின் மெத்தனப் போக்கால் இன்றைய தினம் ஆறு உயிர்களை இழந்துள்ளோம் – என்றார்.

# அனல்மின் நிலையத் தொடர் விபத்து குறித்து ஆய்வு தேவை

வைகோ வலியுறுத்தல்

நெய்வேலி அனல்மின் நிலைய தொடர் விபத்துகள் குறித்து நாடாளுமன்ற நிலைக்குழு ஆய்வு நடத்த வேண்டும் என்று மதிமுக பொதுச் செயலரும் மாநி லங்களவை உறுப்பினருமான வைகோ வலியுறுத்தி னார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நெய்வேலி என்எல்சி இந்தியா நிறுவனத்தின் இரண்டா வது அனல்மின் நிலையத்தில், ஐந்தாவது அலகில் உள்ள கொதிகலன் வெடித்ததில், 6 தொழிலாளர்கள் உயிரிழந்த செய்தி அதிர்ச்சி அளிக்கிறது.

மேலும், 17 பேர் பலத்த தீக்காயங்களுடன் மருத் துவ சிகிச்சைக்காக சென்னைக்கு அனுப்பப்பட்டுள்ள னர். கடந்த மே மாதம் 7 ஆம் தேதி அன்று இதே இரண்டாவது அனல்மின் நிலயத்தில் 6 ஆவது அலகில் உள்ள கொதிகலன் வெடித்ததில் 4 பேர் உயிரிழந்தனர்.

கடந்த ஆண்டு இதே போல கொதிகலன் வெடித்ததில் 2 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். அனல்மின் நிலை யங்களில் ஏற்படும் இதுபோன்ற விபத்துகளைத் தவிர்க்க உடனடியாக தொழில்நுட்பக் குழு ஒன்றை அமைத்து ஆய்வு நடத்த மத்திய நிலக்கரித் துறை அமைச்சகம் உத்தரவிட வேண்டும். அனல்மின் நிலை யங்களின் பராமரிப்புப் பணிகள் முறையாக நடைபெற வும், உரிய கண்காணிப்பு தேவை என்றார்.

# ஹொங்கொங்கில் போராட்டம் 200பேர் பொலிஸாரால் கைது



சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங் கொங்கில் சீனா நடைமுறைப்படுத்துகின்ற பாதுகாப் புச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



அந்தப் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் தண்ணீர் பீரங்கி மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டு களை வீசி கிட்டத்தட்ட 200 பேரைக் கைது செய்த னர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

பல வாரங்களாகச் சீனாவின் நாடாளுமன்றில் நிச்சயமற்ற நிலையில் இருந்து வந்த ஹொங் கொங் மீதான புதிய சட்டத்தின் விவரங்களைச்சீனாவெளியிட்டது.

இது சீனாவின் சுதந்திரமான நகரமான ஹொங்கொங்கைச் சீனாவின் பிடிக்குள் தள்ளியது. இதை எதிர்க்கும் முகமாக ஆயி ரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர் கள் அங்கு கூடினர். அவர்களைக் கட்டுப்படுத்த விளைந்த பொலி ஸார் மீது மிளகு கரைத்துத் தெளித் தனர். 'இறுதிவரை எதிர்ப்போம்' என்று கோச மிட்டனர். இந்த நிலையில் அந்தப் போராட்டத்தில் பங்கு பற்றியவர்களில் 200பேரைப் பொலிஸார் கைது செய்தனர்.

# பிறேசிலில் எகிறுகிறது கொரோனா!



பிறேசிலில் ஒரு நாளில் 33ஆயிரத்து 846 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது.

உலகை அச்சுருத்தி வரும் கொரோனா வைரஸ் பிறேசிலில் கோரத்தாண்டவம் ஆடி வருகிறது.

இந்த நிலையில் அங்கு கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 33ஆயிரத்து 846 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள் ளது. இதன்மூலம் பிறேசிலில் வைரஸ் தொற் றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை தற்போது 14இலட்சத்து 8ஆயிரத்து 485 ஆக அதிகரித்துள் ளது.

கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்க ளின் எண்ணிக்கை 59ஆயிரத்து 656 ஆக அதிகரித்துள்ளது. கொரோனா தொற்றில் இருந்து 7இலட்சத்து 90ஆயிரத்து 40 பேர் குணமடைந் துள்ளனர். கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் வரிசையில் பிறேசில் இரண்டாவது இடத்தில் உள்ளது. உலக அளவில் கொரோனா பாதிப்பில் முதலிடத்தில் அமெரிக்காவும், மூன் றாவது இடத்தில் ரஷ்யாவும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரானில் மருத்துவ நிலையத்தில் தீ 19 பேர் உடல் கருகி உயிரிழப்பு





ஈரானின் தலை நகர் தெஹ்ரானில் மருத்துவ நிலையம் ஒன்றில் எரிவாயுக் கலன் வெடித்ததில் தீ விபத்து ஏற்பட்டது.

இந்தத் தீ விபத்தில் சிக்கி 19 பேர் உயிரிழந் தனர். பலர் காயம டைந்தனர். உயிரிழந் தவர்களில் 15 பேர் பெண்கள். 4 பேர் ஆண்கள். காய மடைந்தவர்களுக்குத் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

காயமடைந்தவர்களில் பல ரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் சாவு எண்ணிக்கை அதி கரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. மருத்துவ நிலையத்தின் முதல் தளத்தில் விபத்து ஏற்பட்டதாகவும் சுமார் 20க்கு மேற்பட்டவர்களைத் தீய ணைப்புப் பணியாளர்கள் காப் பாற்றியதாகவும் தெரிவிக்கப்பட் டது.

தீ விபத்து நடந்ததற்கான கார ணம் குறித்து அதிகாரிகள் விசா ரணை யில் ஈடுபட்டு வருகின்றனர். மருத்துவ நிலையத்திலிருந்த ஒட்சி சன் சிலிண்டர்கள் வெடித்து விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.



**பங்களாதேஷின் டாக்காவில் புரிகங்கா நதி யில் பயணிகள் படகு கவிழ்ந்ததில் பலர் சாவடைந்தனர். உறவுகளை இழந்தவர்கள் சோகத்தில் அழுகிறார்கள். நன்றி ரெய்டர்ஸ்.**

# எகிப்தில் பிரமிட்டுகள் திறப்பு விமானச் சேவைகள் ஆரம்பம்



எகிப்தில் விமான நிலையங்கள், அருங் காட்சியகங்கள், பிரமிட்டுகள் ஆகியவற்றைத் திறக்க அனுமதி அளிக் கப்பட்டுள்ளது.

இதுகுறித்து எகிப்து ஊடகங்கள் வெளியிட்ட செய்தியில், எகிப்தில் விமான நிலை யம், அருங்காட்சியகங்கள், உல கப் பிரசித்தி பெற்ற கிசா பிரமிடுகள் ஆகி யவை மூன்று மாதங்களுக்குப் பிறகு திறக்கப்பட்டுள்ளன.

கெய்ரோ விமான நிலையத்திலி ருந்து 2ஆயிரம் பயணிகளுடன் 14 விமானங்கள் புறப்பட்டன.

மேலும் உக்ரைன் சுற்றுலா பயணிக ளும் விமானம் மூலம் எகிப்து வந்தடைந் தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் பரவல் இருந்தா லும், எகிப்து அரசு பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் நடவடிக்கையில் இறங்கி யுள்ளது என்று அந்தச் செய்திகளில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எகிப்தின் தலைநகர் கெய்ரோவிலும், மற்றொரு முக்கிய நகரமான கிசாவிலும் கொரோனாத் தொற்று எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் அதைத் தடுக்கும் நடவடிக் கையில் எகிப்து அரசு ஈடுபட் டுள்ளது என் றும் தெரிவிக்கப்படுகிறது.



# தனி நாடு ஒன்றை அமைக்க பாடுபடப் போகின்றோம் என நாம் குறிப்பிட்டமை கிடையாது

## நீதியரசர் விக்னேஸ்வரன் விளக்கம்

வடமாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று மாலை கிளிநொச்சியில் தமது கூட்டணிக் காரியாலத்தில் நடந்த பரப்புரை கூட்டத்தில் உரையாற்றினார். அங்கு அவர் கூறியவை வருமாறு:-

எமது முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தை நாம் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் மிக்க வட்டுகோட்டை தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட இடத்தில் இருந்து ஆரம்பித்தோம். அந்தக் கூட்டத்தில் நான் ஆற்றிய உரையில் வட்டுக்கோட்டை தீர்மானத்தை நாம் கைவிடுவதாக அறிவிக்கவில்லை என்று கூறி இருந்தேன். காரணம் சில கட்சிகள் அதனை முற்றிலும் நிராகரித்தது போல் செயற்படுகின்றார்கள். இது பற்றி என்னிடம் கேள்வி எழுப்பிய சிலர் அப்படியானால் தனி நாட்டு கோரிக்கையை நீங்கள் கைவிடவில்லை என்று இதன் மூலம் கூறுகின்றீர்களா என்று கேட்டார்கள். 'காலைக் கதிர்' பத்திரிகையிலும் இவ்விடயம் குறித்துக் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. இதுபற்றி நான் சுருக்கமாக விளக்கவேண்டி இருக்கிறது. தமிழ் மக்களின் பூர்வீக பிரதேசங்களான இணைந்த வடக்கு கிழக்கில் சுய நிர்ணய உரிமை அடிப்படையில் பகிரப்பட்ட இறையாண்மையுடன் கூடிய சமடி தீர்வு ஒன்றினை அடைவதே எனது கட்சி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நோக்கம் என்று தெளிவாகக் கூறி இருக்கின்றோம்.

அதேவேளை நாம் வட்டுக்கோட்டை தீர்மானத்தினை கைவிடுவதாக அறிவிக்கவில்லை என்று கூறியதும் உண்மைதான். வட்டுக்கோட்டை தீர்மானம் என்பது ஒரு வரலாற்று உண்மை. அதனை நாம்



எமது வரலாற்று புத்தகத்தில் இருந்து அகற்றிவிட முடியாது. வட்டுக்கோட்டை தீர்மானத்தில் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அதிலே, சமதர்மத் தமிழீழ அரசை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்ற ஒரு விடயம் தவிர ஏனைய அனைத்து விடயங்களும் இன்றும் அவசியமானவை மற்றும் பொருத்தமானவையுங் கூட. எந்த சந்தர்ப்பதிலும் தனி நாடு ஒன்றை அமைக்கப் பாடுபடப்போவதாக நாம் குறிப்பிட்டது கிடையாது. எமது கோரிக்கை சமஷ்டி அரசியல் முறை எனினும் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம், அவர்களின் சுய நிர்ணய உரிமை, சாதி ஒழிப்பு, சுரண்டல் ஒழிப்பு போன்ற பல விடயங்களை வட்டுக்கோட்டை தீர்மானம் வலியுறுத்துகின்றது. இவற்றை தமிழ் மக்கள் ஒருபோதும் கைவிட முடியாது. ஆகவே தான் வட்டுக்கோட்டை தீர்மானத்தை நாம் கைவிட்டதாக அறிவிக்கவில்லை என்று கூறியிருந்தேன்.

இன்றைய தினம் நாங்கள் எம்மக்களுக்காக ஒன்றிணைந்து உங்கள் முன் வாக்கு கேட்க வந்திருக்கின்றோம். எமது கூட்டணியில் வேறு சிலரையும் இணைத்துக் கொள்வதற்காக முயன்றிருந்தோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது இம்முறை கைகூடி

## வட்டுகோட்டைத் தீர்மானம் தொடர்பில் தன் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துகிறார்

வரவில்லை. எதிர்காலத்தில் ஒத்த கொள்கையுடையவர்களை ஒன்றாக இணைப்பதற்காக தொடர்ந்து முயற்சிப்போம்.

எம்மை மாற்றுத் தலைமை என்று பலர் கூறுகின்றார்கள். ஆனால் மாற்றுத் தலைமை என்று கூறுவது நாம் மாற்றுக் கொள்கை ஒன்றை முன்வைத்திருக்கின்றோம் என்று பொருள் அல்ல. தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் கட்சிகள் எல்லாமே இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டித் தீர்வினையே கோருகின்றன. தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு கூட சமஷ்டி பற்றியும், வடக்கு கிழக்கு இணைப்பு பற்றியும், இறையாண்மை பற்றியும் கூறி வந்துள்ளது.

ஆனால், அரசாங்கங்களுக்கு முண்டு கொடுப்பதன் மூலமும், இனப்படுகொலைக்கு நீதி கோரி எமதுமக்கள்மேற்கொண்டுவரும்போராட்டங்களை மழுங்கடிப்பதன் மூலமும் அரசாங்கத்தை குளிரச் செய்து ஏதோ ஒரு தீர்வினை பெற்றுவிடலாம் என்ற வழி வரைபடத்தின் அடிப்படையிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு செயற்பட்டு வந்துள்ளது. அத்துடன் தேர்தல்கள் முடிவடைந்தவுடன் சமஷ்டிக் கோட்பாடுகளையும் தாயக கோட்பாடுகளையும் சாத்தியம் அற்றவை என்று கூட்டமைப்பு காற்றில் பறக்க விடுவது வரலாறு. அது உங்களுக்குத் தெரியும்.

### மாற்று அணி நாம்

ஆனால், தமிழ்த் தேசியக் கோட்பாடுகளை அடை வதற்கான மாறுபட்ட வழிமுறைகளை முன்வைத்திருப்பதன்மூலமும்அவற்றைபற்றுறுதியுடன் தொடர்ந்து பின்பற்றுவதன் மூலமும் மாற்று அணியாக நாம் பரிணமித்துள்ளோம். 6 வருடங்களுக்கு முன்னர் முதலமைச்சராகப் பதவி ஏற்று யுத்தம் நடைபெற்ற பகுதிகளை பார்வையிட்டு, பொதுமக்களைச்



சந்தித்து, எமது மக்களுக்கு எதிராக நடைபெற்றது இனப்படுகொலை தான் என்பதைப் பகுத்தறிந்து உணர்ந்துகொண்டேன். இதன்காரணமாக, எத்தகைய ஒருபெரும்பொறுப்புஎம்தோள்களில்சுமத்தப்பட்டுள்ளது என்பதை நான் உணர்ந்துகொண்டேன். எத்தனை இடர் வந்தாலும் எமது உரிமைகள் விடயத்தில் எந்த விதமான விட்டுக்கொடுப்புக்களையோ அல்லது காட்டிக்கொடுப்புகளையோ நான் செய்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தேன். அதனால் தான், கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்ட போதிலும் இனப்படுகொலைத் தீர்மானத்தை கைவிடவோ அல்லது பொறுப்புக்கூறல் விடயத்தில் விட்டுக்கொடுப்புக்களைச் செய்யவோ நான் தயாராக இருக்கவில்லை. உண்மையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் வெள்ளம் பெருக்கெடுக்கும் போது நீரோ பிடில் வாசித்தது போல்தான் நடந்து கொண்டிருந்தார்கள். பிரச்சினைகளை அப்படியே விட்டு விட்டு தமது சுயலாப சிந்தனைகளில் இலயித்திருந்தார்கள்.

எனக்கு சிங்கள மக்கள் மற்றும் அரசியல்வாதிகளுடன் இருந்த தொடர்புகள் காரணமாக நான் அரசாங்கத்துடன் இணைந்து அவர்களுக்கு ஏற்ப தாளம் போட்டிருந்தால் அல்லது அவர்களை நெல்சன் மண்டேலாவுக்கு ஒப்பிட்டுத் துதி பாடி இருந்திருந்தால் எனது மாகாண சபைக்கு பல மடங்கு நிதியை அவர்கள் ஒதுக்கி இருந்திருப்பார்கள். பல செயற்திட்டங்களை இங்கு முன்னெடுக்க அனுமதி வழங்கி இருப்பார்கள். ஆனால், அவ்வாறு செய்திருந்தால், தமிழ் மக்களின் பல தசாப்த கால உரிமை போராட்டங்களுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தொ பெரும் துரோ கத்தை நான் இழைத்திருப்பேன். அதனால் நான் அத்தகைய தவறைச் செய்யவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்புடன் மட்டுமல்ல, அப்போதைய பிரதமர் மற்றும் ஜனாதிபதியு டன் நான் பல தடவைகள் இதன் காரணமாக முரண்பட நேர்ந்தது. பல மாத காலம் ரணில் விக்கிரமசிங்க என்னுடன் கதைக்க வில்லை. எனது முகத்தைப் பார்ப்பதை கூட அவர் தவிர்த்து வந்திருந்தார்.

என்னைப் பொறுத்தவரையில், எனது 5 வருட கால முதலமைச்சர் காலத்தில் முடிந்தளவுக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளை சிறப்பாக செய்திருக்கிறேன் என்ற திருப்தி எனக்கு இருக்கின்றது. அரசுடன் நான் முரண் பட்டதாலோ என்னவோ எமக்கு அரசாங்கம் போதிய நிதியை அனுப்பவில்லை. ஆனாலும் நாம் கிடைத்த நிதியை வைத்து சிறப்பாகவே செயற்பட்டிருக்கின்றோம். பல்வேறு திட்டங்களை மேற்கொண்டோம். புலம்பெயர் தமிழ் மக்களிடம் இருந்து நிதியைப் பெற்று சில செயற்திட்டங்களை மேற்கொண் டோம். ஆனாலும், அரசாங்கம் எதற்கும் ஒத்துழைப்பு வழங்கவில்லை. உதாரணமாக, நான் கனடா சென்ற போது அங்குள்ள சில அமைப்புக்கள் எமது மக்க ளுக்கான அபிவிருத்தி திட்டங்களுக்காக ஒருதொகை நிதியை சேகரித்தார்கள். ஆனால், அந்த நிதியை நான் எடுத்துவர மறுத்துவிட்டேன். சட்டப்படி அனுப்பப் பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். எனவே அப்பணத்தை இங்கு கொண்டுவருவதில் சிக்கல் இருந்தது. ஏன் என்றால் முதலமைச்சர் நிதியத்தை தாக்காட்டித் தாக்காட்டி கடைசியில் அனுமதிக்காது விட்டிருந்தார்கள் அரசாங்கத்தினர். தற்பொழுது நான் உருவாக்கியுள்ள நம்பிக்கை பொறுப்பின் ஊடாக அந்த நிதியைப் பெற நடவடிக்கைகள் எடுத்துள்ளேன். இது பற்றி விரவமாக பின்னர் அறிவிப்பேன்.

(10 ஆம் பக்கம் பார்க்க)





# அனைத்துத் தரப்புகளும் ஏற்கும் தீர்வு பெற்றுத் தரப்படும் என்கிறார் பிரதமர்

## நேற்றுத் தமிழ் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வொன்றை, எல்லாத் தரப்பினருடனும் பேசிப் பெற்றுத் தருவோமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களுடன் அலரிமாளிகையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

பலமான ஆட்சியொன்றை அமைக்க முடிந்தால், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பெற்றுத்தரத் தயாராக இருக்கிறீர்களா எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு, ‘அரசியல் தீர்வென்பதை நாம் கைவிடவில்லை. அனைத்துத் தரப்புடனும் பேசி, இலங்கையில் வாழ்கின்ற அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அத்தீர்வைப் பெற்றுக்கொடுப்போம்’ எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்தார்.



### அபிவிருத்திகள் முடங்கின

1977ஆம் ஆண்டுக்குப் பின்னர், எமது அரசாங்கமே வடக்கு, கிழக்கில் பாரிய அபிவிருத்திகளை மேற்கொண்டன. கடந்த ஆட்சிக்காலத்தில் இத்தகைய அபிவி ருத்தியை அம்மக்கள் அனுபவிக்க வில்லை. அவர்களின் ஆட்சியில் அபிவி ருத்தி பின்தள்ளப்பட்டதே தவிர முன்னோக் கிச் செல்ல முடியவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தம் மக்களுக்காக எதையும் செய்யத் துணியவில்லை. மாறாக, வெற் றுப் பேச்சுகளை மாத்திரமே அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

‘எம்மைப் பொறுத்தவரையில் வடக்கு, கிழக்கு, தெற்கு என்று பேதம் பார்த்து அபிவிருத்திகளை முன்னெடுக்கவில்லை. அனைத்துப் பிரதேசங்களிலும் சமாந்தரமாக அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அபிவிருத்திக்கு ஊடாக இளைஞர்கள், வேலை வாய்ப்பில்லாமல் இருப்பவர்களுக்குத் தொழில் கிடைக்க வேண்டும். இதைச் செய்வதற்குத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தவறிவிட்டனர்’ என்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

### கொழும்பு துறைமுக கிழக்கு முனை

‘கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனை அபிவிருத்தி தொடர்பில் அப்போதைய ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் பரிசீலிக்க வேண்டும். அதிலுள்ள நன்மை - தீமைகள் தொடர்பில் இந்தியாவுடன் கலந்துரையாடி முடிவுகள் எடுக்கப்படும்’ என்றார் பிரதமர்.

### கட்டுப்பாட்டுக்குள் கொவிட் - 19

‘இராணுவத்தினரின் உதவியுடன், பிராந்திய சுகாதார அதிகாரிகள், மருத்துவர்களின் ஒத்துழைப்புடன் கொவிட் - 19 பரவலை இலங்கையில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்துள்ளது. வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்புபவர்களில் சிலரே கொவிட் - 19 தொற்றுக்குள்ளாகின்றமை அண்மைக்காலங்களில் கண்டறியப்படுகின்றன. சமூகத்தின் மத்தியில் கொவிட் -19 பரவல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் மக்கள் அச்சங்கொள்ளத் தேவையில்லை என்பதோடு, தனிமனித பாதுகாப்பை அவர்கள் உறுதிப்படுத்திக்கொள்வதும் கட்டாயம்’ என, பிரதமர் மஹிந்த தெரிவித்தார்.

### வடக்கு ஆளுநர் சந்திப்பு

வடக்கு மாகாண ஆளுநர் சார்ள்ஸுடனான சந்திப்பில் முதலீடுகள் தொடர்பாகப் பேசப்பட்டனவா என்ற கேள்விக்கு, ‘முதலீடுகளை நாம் ஒருபோதும் ஒதுக்கி வைக்கவில்லை. அதற்கு நாங்கள் தடையும் விதிக்கவில்லை. ஆகையால், எவராயிலும் எங்கேனும் முதலீடுகள் மேற்கொள்ள விரும்பினால் அதற்கான ஏற்பாடுகளை நாங்கள் செய்துகொடுக்கத் தயாராக இருக்கின்றோம்’ என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியபோது, இடைமறித்த அமைச்சர் பந்துல குணவர்த்தன, ’இலங்கை மத்திய வங்கியினூடாக முதலீட்டாளர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் கடன்களை வழங்கும் பொதியொன்றைத் தயாரித்திருக்கிறோம். அவ்விசேட பொதியினூடாக முதலீடுகளை ஊக்குவிக்க முடியும்’ என்றார்.

### கூட்டமைப்பின் ஆதரவு

அமையவுள்ள புதிய அரசாங்கத்துக்குத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவு தேவைப்படின் அதனை ஏற்க முன்வருவீர்களா எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு, ‘தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமல்ல, எவர் வேண்டுமானாலும் எமக்கு ஆதரவு வழங்க முன்வரலாம். ஆனால், அவர்களின் உதவியில்தான் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டுமென்ற தேவைப்பாடு இம்முறை இருக்காது’ எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதிலளித்தார்.

### கிழக்கு செயலணி

’கிழக்கு மாகாண தொல்பொருள் தலங்களைப் பாதுகாப்பதற்கான ஜனாதிபதி செயலணியில் சிறுபான்மையினரையும் இணைத்துக்கொள்வது தொடர்பாக அமைச்சரவையில் உரையாடியிருக்கிறோம். விரைவில் இவை நடைமுறைப்படுத்தப்படும். அதேசமயம், இச்செயலணியின் செயற்பாடுகளை தொடர்ந்து செல்லவுள்ளவர்கள் அப்பிரதேசத்திலுள்ள சிறுபான்மை அதிகாரிகள்தான் என்பதை மறந்துவிட வேண்டாம்’ என்றார் மஹிந்த.

### காணாமல் போனோர்

காணாமல் போனவர்களின் உறவுகளது நீண்டகாலப் போராட்டத்துக்குத் தீர்வு கிடைக்காதா? என்று பிரதமரிடம் கேட்டபோது, ‘காணாமலாக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் தொடர்பில் யதார்த்த நிலையை உணரவேண்டும். அவர்கள் மீண்டும் வரவில்லை என்றாலோ அல்லது உலகின் எப்பகுதியிலேனும் இல்லை என்றாலோ அவர்கள் மரணித்து விட்டார்கள் என்றே அர்த்தப்படும். இந்த உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். அப்படிப் புரிந்துகொண்டால், காணாமல் போனோருக்கான நட்டஈடுகளையோ அல்லது வேறு செயற்றிட்டங்களையோ முன்னெடுக்க முடியும் என பிரதமர் மஹிந்த கூறியபோது, இடையில் குறுக்கிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

’அரசாங்கம் வழங்குகின்ற நிவாரணங்களைப் பெறுபவர்களின் பட்டியலில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது. கொரோனா வைரஸ் பரவல் காலத்தில் வழங்கப்பட்ட 5,000 கொடுப்பனவுகளைப் பெறுவதற்கும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது’ என்றார்.

### கருணாவின் பேச்சு

’கருணா அம்மான் வெளியிட்ட கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. அதில் தவறு உள்ளது. அது தொடர்பாக விசாரணைகள் இடம்பெறுகின்றன’ என பிரதமர் கூறுகையில், ‘பொது மன்னிப்பு வழங்கியா கருணா அம்மான் விடுதலை செய்யப்பட்டார்?’ என்ற கேள்வியெழுப்பப்பட்டது. அதற்குப் பிரதமர் பதிலளிக்கையில், ’அவருக்கு பிரத்தியேகமாக பொதுமன்னிப்பு வழங்கப்படாதபோதும், பொதுவாக முன்னாள் போராளிகளுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பில் அவரும் உள்ளடங்குவார். கருணா உட்பட 12,000 இற்கும் மேற்பட்ட புலிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கினோம்’ என்றார் மஹிந்த.

இப்படியான பொதுமன்னிப்பின் கீழ் அரசியல் கைதிகளை விடுவிக்க முடியாதா? என்று கேட்கப்பட்டபோது, ’பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் பாரிய குற்றங்களுடன் தொடர்புடைய பலரும் உள்ளடங்குகின்றனர். அவர்களை உடனடியாக பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்க முடியாது’ என்றார் பிரதமர்.

’அப்படியென்றால், கொலை குற்றத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இராணுவ வீரர் சுனில் ரத்னாயக்க என்பவரும் பொது மன்னிப்பின் கீழா விடுதலை செய்யப்பட்டார்?’ என்ற கேள்விக்கு, ’பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவில்லை. அது ஜனாதிபதியின் தனிப்பட்ட மன்னிப்பு. சம்பந்தப்பட்ட நீதிபதிகளுடன் ஜனாதிபதி கலந்தாலோசித்தே, தனக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி அவரை விடுதலை செய்தார். யாரேனும் அந்த வகையில் தமக்கான விடுதலை வேண்டி கோரிக்கை விடுக்கப்பட்டால் அது தொடர்பில் பரிசீலிக்கப்படும். சட்டரீதியான சிக்கலின்றி அனுமதி கிடைத்தால் நிச்சயம் விடுவிக்கப்படுவார்கள்’ என மஹிந்த தெரிவித்தபோது, ’துமிந்த சில்வா போன்றவர்களும் அவ்வாறு கோரினால் அக்கோரிக்கை பரிசீலிக்கப்படுமா’ எனக் கேட்கப்பட்டது.

‘அப்படியொரு கோரிக்கை முன்வைக்கப்பட்டால் அதற்கான நடைமுறைகள் என்னவென்பதை ஆலோசிக்க வேண்டும்’ எனப் பதிலளித்தார் பிரதமர்.

### தொண்டமானின் இறுதி ஆசை

‘ஆறுமுகன் தொண்டமானின் இறுதி நிமிடங்களில் பரிந்துரைக்கப்பட்ட ஆயிரம் ரூபா சம்பள விவகாரம் உள்ளிட்ட பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து வருகிறோம். குறிப்பாக, சம்பள விவகாரத்தில் பல சுற்றுப் பேச்சுகளை கம்பனி நிர்வாகத்துடன் நடத்தியிருக்கிறோம். ஆயிரம் ரூபா உறுதியாகும் தருணத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் அதனை நிறுத்திவிட்டார். தேர்தல் காலத்தில் இது கூடதெனக் கூறிவிட்டார். ஆகையால், தேர்தல் முடிந்த பின்னர், நிச்சயமாகத் தொண்டமானின் ஆசைகள் நிறைவேறும்’ எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

### கைதுகள் தொடர்பில் அச்சம் வேண்டாம்

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் வடக்கில் 21 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு, ‘தேசிய பாதுகாப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்துபவர்கள் தொடர்பில் நாங்கள் விழிப்பாக இருக்கின்றோம். இது வடக்குக்கானது மாத்திரமல்ல. தெற்கிலும் இத்தகைய கைதுகள் பல இடம்பெறுகின்றன. ஒரு வேளை நாங்கள் கைதுசெய்யாவிட்டாலும் நீங்கள் எங்களைத்தான் கேள்வி கேட்பீர்கள். ஆகையால், இத்தகைய கைதுகள் தொடர்பில் பொதுமக்கள் அச்சங்கொள்ளத் தேவையில்லை. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் இத்தகைய கைதுகள் இடம்பெறுகின்றன’ எனப் பதிலளித்தார் பிரதமர். வடக்கில் முகாம்களை அண்டிக் கண்டு பிடிக்கப்பட்ட சில வெடிப் பொருள்கள் சம்பந்தமாகவும் இக்கைதுகள் இடம்பெற்றிருக்கலாம் என்றார் அவர்.

### எம்.சி.சி. உடன்படிக்கை

எம்.சி.சி. உடன்படிக்கை தொடர்பில் நிபுணர் குழுவால் வழங்கப்பட்ட ஆய்வறிக்கையை இன்னமும் படிக்கவில்லை எனவும், அமைச்சரவையில் இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், அதனை முழுமையாகப் படித்து, மேலதிகமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானிக்கப்படுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் தூக்குத்தண்டனை அமுலாகும்!

## சஜித் வாக்குறுதி



பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்களுக்கு எமது ஆட்சியின் கீழ் தூக்குத்தண்டனை வழங்குவதற்கு நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதிகளாலும், அடிப்படைவாதிகளலும் மிலேச்சத்தனமாக முன்னெடுக்கப்பட்ட தாக்குதலே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலாகும். பயங்கரவாதிகள் தொடர்பில் தெளிவானதொரு நிலைப்பாட்டிலேயே நான் இருக்கின்றேன். அதாவது பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள், திட்டமிடுபவர்கள், செயற்படுத்துபவர்கள் என்று அனைவருக்கும் தூக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும். இது தவறான முடிவாக இருக்காது.

ஓகஸ்ட் 5 ஆம் திகதி வெற்றிபெற்ற பின்னர், இதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இம்முறை ஐக்கிய மக்கள் சக்திக்கு மக்கள் அமோக ஆணையை வழங்கி, புதியதொரு பயணத்துக்கு ஆதரவை வழங்குவார்கள் என நம்புகின்றேன் – என்றார்

# சட்டவிரோத மின்சாரம்: 1,937 பேர் மீது வழக்கு!

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 1,937 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோத மின்சாரம் பெறுபவர்களைக் கைது செய்வதற்காக அமைச்சர் மஹிந்த அமரவீரவின் ஆலோசனைக்கு அமைய, இலங்கை மின்சார சபையின் விசாரணைப் பிரிவினர், பொலிஸாரின் உதவியுடன் களமிறங்கியுள்ளனர்.

இதற்கமைய, கடந்த வருடத்தின் மே மாதம் முதல் இவ்வருடத்தின் மே மாதம் வரையான ஒரு வருட காலப்பகுதியினுள் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 1,937 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் 59 மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது , எனவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவதன் காரணமாக, இலங்கை மின்சார சபைக்கு வருடமொன்றுக்கு 100 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அம்பாறையில் தேசிய காங்கிரஸ் 4 ஆசனங்களைக் கைப்பற்றுமாம்

## அதாவுல்லா கணிப்பு



எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் ஒவ்வொரு ஊர் மக்களும் ஒற்றுமைப்பட்டு சிந்தித்து வாக்களிப்பார்களாயின் இம்மாவட்டத்தில் தேசிய காங்கிரஸ் கட்சி 04 ஆசனங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

– இவ்வாறு தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்தார்.

இறக்காமம் பிரதேசத்தில் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் சட்டத்தரணி கே.எல். சமீமின் இல்லத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அதன் நோக்கங்கள் சரியான பாதையில் இட்டுச்செல்லவில்லை என்பதாலும், மர்ஹூம் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் கண்ட கனவுகளை நிறைவேற்றவுமே நாங்கள் தேசிய காங்கிரஸ் கட்சியை உருவாக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

எமது மக்களின் முறையான தேவைகளை இனம்கண்டு செயற்படுவதனால்தான் மக்கள் எம்முடன் கைகோர்த்து இணைகின்றனர். எமது பிரச்சினைகளை முரண்பாடு இல்லாமல் இணக்கப்பாட்டோடு தீர்க்க வேண்டும்.

எமக்குப் பிரச்சினைகள் ஏற்படும்போது அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கத்தான் தலைமைத்துவம் முன்னின்று செயற்பட வேண்டும். மாறாக மக்களைக் கூட்டி படங்கள் எடுப்பதன் மூலமும் கோஷங்கள் போடுவதன் மூலமும் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வுகளைக் காண முடியாது. விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் எமது மக்களைக் கொன்று குவித்த வரலாறு எமக்குத் தெரியும்.

இந்தத் தேர்தலில் எமது மக்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கும் வாக்களிப்பதன் மூலம் எமது மக்களுக்கு என்ன நடக்கப் போகின்றது? இவர்களால் எதனையும் செய்ய முடியாது. தேசிய காங்கிரஸின் கொள்கைகள் என்ன என்பதை தற்போது மக்கள் விளங்கிக் கொண்டுள்ளனர் – என்றார்.

# வரவிருக்கும் ராஜபக்ஷவின் ஆட்சியில் சிறுபான்மையினருக்கும் இடம் தேவை

## வலியுறுத்துகிறார் சட்டதரணி றியாஸ்





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

சிங்கள மக்களின் வாக்குகளால் மகிந்த ராஜபக் மீண்டும் பிரதமர் ஆசனத்தில் அமர்வார். அந்த ஆட்சியில் சிறுபான்மை மக்களும் பங்காளிகளாக இருக்க வேண்டும் என்றால் மொட்டுடன் கூட்டுச் சேர்ந்த நிற்பவர்களை ஆதரிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் சட்டத்தரணி ஏ.எல்.எம். றியாஸ்.

தேசிய காங்கிரஸ் கட்சியின் மருதமுனை பிரதேச அரசியல் செயற்பாட்டாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு தொடர்ந்து பேசிய அவர் தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் கடந்த காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அலங்கரித்த யாரும் முஸ்லிம்களின் தேவைகள் தொடர்பில் சரியாகக் கரிசனை செலுத்தவில்லை. மாறாக, இனவாத பேச்சுக்கள் மூலமும் பிரித்தாளும் சூழ்ச்சி மூலமும் மக்களைச் சிக்கலில்தான் மாட்டி விட்டார்கள்.

சூடாக்கும் அரசியலை செய்த இவர்களில் பலர் சிங்கள மக்கள் மத்தியில் விரோதிகளாகவே பார்க்கப்படுகிறார்கள். இவர்கள் வாய் திறந்தால் பெரும்பான்மை இன மக்கள் ஆத்திரம் கொள்கிறார்கள். இப்படித்தான் இவர்களின் கடந்த கால அரசியல் செயற்பாடுகள் அமைந்திருந்தது.

இனிவரும் காலங்களில் இந்த சூடாக்கும் அரசியல் எமது நாட்டில் எடுபடாது. இவர்கள் தேர்தலில் போட்டியிடும்போது மஹிந்த அரசை விமர்சிப்பதும் பின்னர் மஹிந்த அரசில் இணைந்து சலுகைகளும், அமைச்சுக்கள் பெறுவதும் வாடிக்கையாகிவிட்டது. இனி அந்த நாடகங்கள் ஆளும் அரசியல் தலைவர்கள் மத்தியில் எடுபடாது.

இவர்கள் இனி எதிர்கட்சி ஆசனங்களில் அமர்ந்து கொண்டு கதிரையை சூடாக்க மட்டுமே முடியும். ஆளும் தரப்பிலிருந்தே எதையும் செய்ய முடியாத இவர்கள் எதிரணியில் இருந்து எதை சாதிக்க முடியும்?

மஹிந்த அரசுடன் மிக நெருக்கமான உறவை கொண்ட தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாஉல்லா கடந்த 5 ஆண்டுகளாக நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாது போன இடைவெளி மிகப் பெரிதாக இருக்கிறது.

இந்த இடைவெளி மூலம் நாம் பல பிரச்சினைகளைச் சம காலத்தில் அனுபவித்து வருகிறோம். இவற்றிலிருந்து விடுதலை பெற நம்மை நாமே ஆளும் வகையில் நமது தலைவர் அதாஉல்லா மீண்டும் அதிகாரத்தை அடைய வேண்டும்.

அதிக கல்விமான்களையும், சிறந்த நிர்வாகிகள், புத்திஜீவிகளை கொண்ட மருதமுனை மக்கள் இம்முறை சிந்தித்து வாக்களிக்க வேண்டும். அப்போதுதான் நமது எதிர்காலம் சிறப்பாக அமையும். – என்றார்.

# தனி நாடு ஒன்றை...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வட மாகாண சபைக்கு முதலமைச்சர் நிதியத்தை அமைத்து புலம்பெயர் தமிழ் மக்களிடம் இருந்து நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்ள பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்ட போதிலும் அரசாங்கம் அதனை செய்யவிடாத காரணம் நிதியம் அனுமதிக்கப்பட்டால் எனக்கு மக்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைத்துவிடும் என்று நினைத்துப்போலும்.

கூட்டமைப்பின் தலைவர்கள் கூட அவ்வாறு நினைத்தார்களோ என்னவோ அந்த நிதியத்தை உருவாக்கும்படி தாங்கள் முண்டுகொடுத்து வந்த அரசாங்கத்திடம் ஒரு போதும் கேட்கவில்லை. முற்றுமுழுதாக எமது மக்களின் நலன்களை முன்னிறுத்தாமல் வெறுமனே அரசியல் இலாபங்களை கருத்தில் கொண்டே கூட்டமைப்பு செயற்பட்டு வந்திருக்கின்றது.

ஆகவே, மக்களே தயவுசெய்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பில் ஒரு மதிப்பீட்டை செய்து அதன்பின் இம்முறை தேர்தலில் வாக்களியுங்கள்.

எனது வாழ் நாளில் நூற்றுக்கணக்கான தீர்ப்புக்களை வழங்கிய நான், இன்று தமிழ் மக்களின் எதிர்காலம் தொடர்பில் ஒரு முக்கியமான தீர்ப்பினை இந்தத் தேர்தலின் ஊடாக வழங்குமாறு எனதருமை மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். நீங்கள் வழங்கும் இந்த தீர்ப்பு எமது தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு எமக்கு வலுச் சேர்ப்பதாக அமையட்டும்! இனப்படுகொலைக்கு நீதியை பெற்றுத் தருவதாக அமையட்டும்! உங்களை ஏமாற்றியவர்களுக்கு பாடம் புகட்டுவதாக அமையட்டும்! நீங்கள் சென்றமுறை வழங்கிய அதிகாரத்தை அரசாங்கத்துக்கு முண்டுகொடுத்து சலுகைகளை அனுபவித்தவர்களுக்கு தண்டனை வழங்குவதாக அமையட்டும்! எமது உரிமைகளை வென்றெடுக்கும்வரை நாம் ஓயமாட்டோம் என்பதை அரசாங்கத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் எடுத்துக் கூறி என் சிற்றுரையை முடித்துக் கொள்கின்றேன்.

## பிரச்சாரத்துக்கான...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

2020 ஜனவரியில் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு எமது ஆட்சியில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த நிலையில் அது இந்த ஆட்சியின் கீழ் தடுத்து நிறுத்தப்பட்டது. ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவும் குறைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, நாம் இராணுவத்தினரை மதிக்கின்றோம். அவர்களின் சேவைகளைப் பாராட்டுகின்றோம். ஆனால், எதற்காக நிர்வாக சேவைக்கு இராணுவ நியமனங்கள் வழங்கப்படுகின்றன? இதுவரையில் 20 இற்கும் மேற்பட்ட நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதாவது அரசு ஊழியர்களுக்கு முடியாது, அதனால்தான் இராணுவம் களமிறக்கப்பட்டுள்ளது என்ற விம்பத்தை உருவாக்குவதற்கு அரசு முயற்சிக்கின்றது. இது அரச ஊழியர்களை அவமதிக்கும் செயலாகும்.

மத்திய வங்கி ஆளுநர், திறைசேரி செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர் போன்ற பதவிகளுக்கான நியமனங்களை ஜனாதிபதியே வழங்குகிறார். ஆனால், வங்கி அதிகாரிகளை அழைத்து மிரட்டுகின்றனர். நாடு ஏகாதிபத்தியத்தை நோக்கி பயணிக்கின்றது என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. எனவே, சுயாதீன அரச சேவையை இல்லாது செய்வதற்கு இடமளிக்க வேண்டாம் என அரச ஊழியர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். ஓகஸ்ட் மாதத்துக்கு பின்னர் அரச ஊழியர்களுக்கான அனைத்துக் கொடுப்பனவுகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரத்துக்குக் கீழ் கல்வி கற்றவர்களுள் ஒரு லட்சம் பேருக்கு வேலை வழங்கப்படும் என அரசு அறிவித்திருந்தது. விண்ணப்பங்களும் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்பட்டன. 20 லட்சம் பேர் விண்ணப்பித்திருந்தனர். இராணுவ அதிகாரிகளை ஈடுபடுத்தி நேர்முகப்பரீட்சையும் நடத்தப்பட்டது. ஆனால், தற்போது என்ன நடக்கின்றது?

தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இராணுவத்தைக் களமிறக்கி, வீடு வீடாகச் சென்று அரச நியமனம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு வருகின்றது. அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கே தடுமாறும் இந்த அரசு எப்படி நியமனங்களை வழங்கும்?

இராணுவத்தினரை ஈடுபடுத்தி இவ்வாறு முன்னெடுக்கப்படும் அரசியல் பரப்புரையை தடுத்து நிறுத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொள்கின்றோம். அதேபோல் இராணுவம் அரசியலில் ஈடுபடுவதை நிறுத்துமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமும், இராணுவத் தளபதியிடமும் கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறு இல்லாவிட்டால் எமது ஆட்சியின்கீழ் நடவடிக்கை எடுக்க நேரிடும் – என்றார்.

---

## பிரசார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவையில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்கள் எவரும் அரசியல் பணிகளில் ஈடுபடக்கூடாது எனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது பிரசார நடவடிக்கைகளில் ஜனாதிபதியின் புகைப்படங்களைப் பயன்படுத்துகின்றனர் எனவும், இராணுவம் மற்றும் அரச அதிகாரிகளைச் சம்பந்தப்படுத்திக் கொள்கின்றனர் எனவும், பல்வேறு நியமனங்களைத் பெற்றுத் தருவதாக வேட்பாளர்கள் வாக்குறுதியளிக்கின்றனர் எனவும் தகவல்கள் கிடைத்துள்ளன என்று ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர அனைத்து ஆளுநர்கள், அமைச்சின் செயலாளர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், நியதிச்சட்ட நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஏனைய துறைத் தலைவர்களுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் பிரசாரத்திற்கு ஜனாதிபதியின் புகைப்படத்தைப் பயன்படுத்த வேண்டாம் என்றும், அரச ஊழியர்கள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் என்றும் கடுமையாக அறிவுறுத்துமாறும் ஜனாதிபதி செயலாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அனைத்து அரச ஊழியர்களும் இந்த அறிவுறுத்தலைப் பின்பற்றுமாறு ஆளுநர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட நிறுவனத் தலைவர்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இதன் பிரதியொன்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

---

## நான் வென்றால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்துக்கு தேர்தல் பரப்புரைக்காக வருகை நேற்று வந்திருந்த அவர் நீர்வேலியடியில் உள்ள இலங்கை வேந்தன் கல்லூரியில் மாலை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றினார். இதன்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த வடக்கு கிழக்கு மக்களுக்கு எனது நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன். யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களில் எனது மேற்பார்வையின் கீழ் அபிவிருத்தி செயலணி ஒன்றை உருவாக்கி இவ் மாவட்டங்களை சீர் செய்வதே எனது நோக்கமாகும்.

வடக்கில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு, நுண்கடன், வேலை வாய்ப்புப் போன்ற பல்வேறான பிரச்சினைகள் உள்ளன. நான் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றாலும், வெற்றி பெறாது போனாலும் இந்த பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை பெற்றுகொடுப்பதற்கு முன்னிற்பேன். வடக்கின் ஒவ்வொரு மாவட்டத்திலும் என்னுடைய நேரடியான கண்காணிப்பின் கீழ் தேவையான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பேன்.

எதிர்வரும் 5ஆம் திகதி முழு இலங்கையிலும் உள்ள மக்கள் தொலைபேசிச் சின்னத்தில் போட்டியிடுகின்ற ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. நிச்சயமாக 5ஆம் திகதி நாங்கள் அரசை பொறுபேற்போம். அதன் பின்னர் மக்களுக்குப் பல திட்டங்களை முன்னெடுக்க இருக்கின்றோம். அதன் ஒரு கட்டமாக வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட, வருமானம் குன்றிய ஒவ்வொரு குடும்பத்துக்கும் சுயதொழில் வாய்ப்புக்காக தலா 20,000 ரூபா வழங்க உள்ளோம்.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை குறைவடைந்துள்ளது. ஆனால் இப்போது ஆட்சியில் உள்ள அரசு எரிபொருளின் விலையைக் குறைப்பதாக இல்லை. அது மாத்திரமல்லாமல் ஒருவருட காலத்திற்கு எரிபொருள் விலையினை குறைப்பதற்கான எண்ணம் இல்லை என தெரிவித்திருக்கிறது. எனவே 5ஆம் திகதி அரசை அமைக்கின்றபோது 24 மணித்தியாலத்திற்குள் எரிபொருள் விலையை குறைப்பேன்.

இந்த அரசு ஆட்சியினை பொறுப்பேற்கும் போது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலுக்கான, தனிப்பட்ட ரீதியிலான நான்கு வட்டி வீத கடன் தொகையினை வழங்குவதாக பொய்யான வாக்குறுதியினை வழங்கி இருந்தது. இன்று வரை குறித்த வட்டி வீதத்தில் கடன் தொகை வழங்கப்படவில்லை. ஆனால் நாங்கள் அரசைப் பொறுப்பேற்று ஒரு வார காலத்திற்குள் நான்கு வீதத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலுக்கான கடன்களை வழங்குவோம்.

2009 மே 18 யுத்தம் நிறைவடைந்து 11 வருடங்கள் கடந்துள்ளன. இதுவரை காலமும் உங்களுடைய வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்றவர்கள் வடக்கை அபிவிருத்தி செய்தார்களா எனக் கேள்வி எழுப்பினால் இல்லை என்றே பதில் கிடைக்கும். உங்களிடம் ஒரு விதமாகப் பேசுகிறார்கள். அபிவிருத்தி என வரும்போது எங்களிடம் வேறுவிதமாகவும் ஊடகங்களில் வேறுவிதமாகவும் பேசுகிறார்கள். அவர்கள் பேசுவதற்கும் நடப்பதற்கும் இடையில் நீண்ட இடைவெளி காணப்படுகின்றது. இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

என்னிடம் பொய் இல்லை. நான் வெற்றுக் கோசங்களை எழுப்புபவில்லை. நீங்கள் நம்பிக்கையாக ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று சொல்லுங்கள், சஜித் பிரேமதாஸ எமது பிரதேசத்தியின் அபிவிருத்தியை பொறுப்பேற்கின்றார் என்று. யாழ் தேர்தல் மாவட்டத்தை ஐக் கிய மக்கள் சக்தி சார்பில் வெற்றிகொண்டு மக்களுக்கான அபிவிருத்தி திட்டங்களை முழுமையாக மேற்கொள்வோம்.

மக்களாட்சி என, சொல்லில் மாத்திரம் இருக்காமல் செயலிலும் இருக்கவேண்டும் என நாம் எண்ணுகின்றோம். மக்கள் தமது பிரதேசங்களில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் மக்கள் பிரதிநிதிகளாகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், பிரதமர், ஜனாதிபதியை நாடவேண்டி வரும். அவ்வாறு இல்லாமல் மக்களே தமது பிரதேச அபிவிருத்தி இலக்குகளை மேற்கொள்ளும் விதத்தில் கிராம இராச்சியம், நகர இராச்சியம் போன்ற திட்டங்களைக் கொண்டுவரவுள்ளோம்

வடக்கு மக்களின் வலி, வேதனை எனக்குத் தெரியும். வடக்கு மக்கள் எவ்வாறான வாழ்க்கையைக் கொண்டு நடத்துகின்றனர் எனத் தெரியும். அவர்களுடைய பொருளாதாரச் சிக்கல்கள் தொடர்பிலும் நான் நன்கு அறிவேன். இலங்கையின் அரசமைப்பின் மூலம் நாட்டில் வாழும் அனைவரும் சமமாக வாழக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். அது சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், மலையகத்தவர், பேகர் என எந்த இனமாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் சமமாக வாழக் கூடிய நிலைமை உருவாக வேண்டும்

நாம் இலங்கையர்கள். நாம் இலங்கையை ஒன்றாக முன்னெடுக்கவேண்டும் என்ற எண்ணம் எங்கள் எல்லோர் மனதிலும் எழவேண்டும். ரணசிங்க பிரேமதாஸவின் மகனாகச் சொல்கிறேன் சஜித் பிரேமதாஸவாகிய நான் அதற்கு முழு மூச்சாகச் செயற்படுவேன் – என்றார். (ம – 11)

# தாயும் பிள்ளையும் விபத்தில் காயம்



யாழ்ப்பாணம், ஜூலை 02

யாழ். கச்சேரி – நல்லூர் வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் மகளும் தூக்கி வீசப்பட்டு காயமடைந்துள்ள நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். கிட்டு பூங்கா சந்தியில் இருந்து கச்சேரி நோக்கி பயணித்த கார் ஒன்று கச்சேரி – நல்லூர் வீதியும் நாவலர் வீதியும் சந்திக்கும் சந்தியில் கடக்க முற்பட்ட மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் பிள்ளையும் தூக்கி வீசப்பட்டிருந்தனர். மோட்டார் சைக்கிளை இடித்து தள்ளிய அந்தக் கார் வீதி அருகில் இருந்த தொலைபேசிக் கம்பத்துடன் மோதி நின்றது.

இதையடுத்து விபத்தில் சிக்கி காயமடைந்த தாயும் பிள்ளையும் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

விபத்தை ஏற்படுத்திய கார் வங்கி முகாமையாளர் ஒருவருக்கு சொந்தமானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

---

## தரம் 01, 02...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

வழிகாட்டல்களுக்கு அமைய, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்வாறு திறக்கப்படும் ஒவ்வொரு பாடசாலைகளையும் கிருமி நீக்கம் செய்வது தொடர்பான நடவடிக்கைகள் குறித்து ஆராயுமாறு, கல்வி அமைச்சு, மாகாணக் கல்வி அமைச்சுகள் மற்றும் அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, அனைத்து தேசிய கல்வியியல் கல்லூரிகளின் இரண்டாம் ஆண்டு பயிற்சி ஆசிரியர்களுக்கான (2017/2019 குழு) தங்கியிருந்து கற்கைகளைத் தொடரும் நடவடிக்கைகள் ஜூலை 07 முதல் ஜூலை 31 வரை இடம்பெறவுள்ளது.

அத்துடன் அனைத்து ஆசிரியர் கலாசாலைகளினதும் முதலாவது மற்றும் இரண்டாவது ஆண்டு பயிலுனர் ஆசிரியர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் ஜூலை 07 முதல் ஆரம்பிக்கக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய கல்வியியல் கல்லூரிகளின் மூன்றாம் ஆண்டு பயிலுனர் ஆசிரியர்கள் (2016/2018 குழு) தமது பாடசாலை பயிற்சிகளை (Internship) பூரணப்படுத்துவதற்காக, ஜூலை 07 முதல் ஜூலை 31 வரை பாடசாலைகளில் இணைக்கப்படவுள்ளார்கள்.

அத்துடன், தேசிய கல்வியியல் கல்லூரிகளின் இரண்டாம் ஆண்டு பயிலுநர் ஆசிரியர்கள் (2017/2019 குழு) தமது பாடசாலை பயிற்சிகளுக்காக (Internship) ஓகஸ்ட் 10 ஆம் திகதி பாடசாலைகளில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தேசிய கல்வியியல் கல்லூரிகளின் முதலாம் ஆண்டு பயிலுநர் ஆசிரியர்கள் (2018/2020 குழு) தங்கியிருந்து கற்கைகளைத் தொடரும் நடவடிக்கை ஓகஸ்ட் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

தற்போது எமது நாடு மற்றும் கல்வி நிறுவனங்கள் வேகமாக வழமைக்குத் திரும்பி வருகின்ற நிலையிலும், பிள்ளைகளை சுகாதாரப் பழக்கங்களை விட்டும் தூரமாக்கி விடாது, அவர்களின் உடல் நலனை பாதுகாப்பதில் விழிப்புடன் இருக்குமாறு, அனைத்துப் பெற்றோர்கள், அதிபர்கள், ஆசிரியர்களிடம் கல்வி அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

5 கட்டங்களில்
பாடசாலைகளின்
மீள் திறப்பு

கொரோனா வைரஸ் பரவலை அடுத்து, கடந்த மார்ச் மாதம் 13ஆம் திகதி மூடப்பட்ட நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளும் நான்கு கட்டமாக திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய கடந்த ஜூன் 29ஆம் திகதி, ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்காக திறக்கப்பட்டன.

2ஆம் கட்டமாக, தரம் 05, 13, 11 ஐச் சேர்ந்த மாணவர்களின் கல்வி நடவடிக்கை எதிர்வரும் ஜூலை 06 ஆம் திகதி ஆரம்பமாகும்.

3ஆம் கட்டமாக எதிர்வரும் ஜூலை 20 ஆம் திகதி தரம் 10, 12 மாணவர்களின் கல்வி நடவடிக்கை ஆரம்பிக்கப்படும்

4ஆம் கட்டமாக ஜூலை 27 ஆம் திகதி தரம் 03, 04, 06, 07, 08, 09 மாணவர்களின் கல்வி நடவடிக்கை ஆரம்பிக்கப்படும்.

5ஆம் கட்டமாக ஓகஸ்ட் 10ஆம் திகதி தரம் 01, 02 மாணவர்களின் கல்வி நடவடிக்கை ஆரம்பிக்கப்படும்

காலைக்கதிர் Kalaikkathir

# 2004 நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் கள்ள வாக்குகள்

## சட்ட நடவடிக்கைக்கு சிறிதரன் சாட்சியம் என்கிறார் சங்கரி

2004ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் சட்டவிரோதமாகவே வடக்கு, கிழக்கிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இதுவரை நான் சொல்லி வந்தாலும், நிரூபிக்கப் போதுமான ஆதாரம் இருக்கவில்லை. இப்பொழுது சிறிதரன் 75 கள்ள வாக்குகளைப் போட்டதாகப் பகிரங்கமாக சாட்சி சொன்னதன் மூலம், இந்த விவகாரத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கும் சாட்சியமும், துணிவும் எனக்கு கிடைத்துள்ளது.

– இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்சங்கரி தமிழ் இணைய ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-



2004ஆம் ஆண்டு நியாயமற்ற தேர்தல் நடந்ததாக நான் சொல்லி வந்தேன். அதற்குச் சாட்சியிருக்கவில்லை. இப்பொழுது சிறீதரன் தனது வாயால் அதற்குச்சாட்சிசொல்லியுள்ளார். சிறிதரன் 75 வாக்குகள் போட்டதாகச் சொல்கிறார். அவரைப் போல எத்தனை பேர் கள்ள வாக்களித்திருப்பார்கள். விடுதலைப் புலிகள் சார்பில் இந்த நியமனப் பத்திரத்தை தாக்கல் செய்கிறேன் என்று கூறியிருந்தார்.

விடுதலைப்புலிகள் கொடுத்த விஞ்ஞாபனத்தை, சட்டத்தரணி சம்பந்தன் அச்சிட்டு விநியோகித்தார். தேர்தலின் பின்னர், வடக்கு கிழக்கு மக்கள் எம்மை மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொடுத்து வெல்ல வைத்துள்ளனர் என்று அறிக்கை விட்டார். இது ஒரு படுபொய் என்பது இப்போது நிரூபணமாகியுள்ளது.

இந்த மோசமான தேர்தல் நடவடிக்கை நாட்டை எவ்வளவு பாதிக்கும் என்பதை சம்பந்தன் யோசிக்கவில்லை, தேசத்துரோக குற்றச்சாட்டிற்கு ஆளாவேன் என்பதை யோசிக்கவில்லை.

அந்த ஐந்து வருடமும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் மோசடியாக நாடாளுமன்ற உறுப்பினர்களானவர்கள். சம்பந்தனும், அவரோடு சேர்ந்தவர்களும் அதற்கு உடந்தையாக இருந்துள்ளனர்.

இதுவரை எனக்கு ஆதாரம் இருக்கவில்லை. இப்போது சிறிதரன் மூலம் ஆதாரம் கிடைத்துள்ளது. அவரது தகவல் எனக்குத் தைரியத்தை தந்துள்ளது. இனி சட்ட நடவடிக்கை எடுக்கப் போகிறேன் – என்றார்.

# ரணில், சஜித் ஆதரவாளர்கள் 'மொட்டு' கட்சியுடன் சங்கமம்

## லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 02

ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் கீரியும் பாம்பும் போல் ஒன்றை ஒன்று முட்டி மோதுகின்றன. இந்தநிலையில் அக்கட்சிகளின் ஆதரவாளர்கள் கட்சிகள் மீது வெறுப்புக் கொண்டு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பக்கம் இணைகின்றார்கள்.

– இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டு மக்கள் அனைவரும் கட்சி பேதம், இன, மத, பேதங்களை மறந்து ஒற்றுமையாக தற்போதைய தலைமைத்துவத்துக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும்.

ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களைப் பொதுத் தேர்தலில் மக்கள் நிராகரிக்க வேண்டும். தகுதியும் திறமையும் உள்ளவர்களை மக்கள் தெரிவுசெய்ய வேண்டும்.

எதிர்கால சிந்தனைப் போக்குடைய தலைவர் ஒருவர் நமது ஜனாதிபதியாக வந்தமை நாட்டு மக்களின் அதிஷ்டமாகும். இதனால் கொரோனா வைரஸ் நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து நாட்டு மக்களைக் காப்பாற்ற முடிந்தது – என்றார்.

# இரு ரி56 ரக துப்பாகிகள் வெல்லாவெளியில் மீட்பு

மட்டக்களப்பு, வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள 40ஆம் கிராமம் பிரதேசத்தில், கைவிடப்பட்ட காணியொன்றில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ரி56 ரக துப்பாக்கிகள் இரண்டை, விசேட அதிரடிப்படையினர் நேற்று மீட்டுள்ளனரென, வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

நிலத்தில் வெளியே துப்பாக்கி தெரிந்த நிலையில், அதைக் கண்டு பொலிஸாருக்கு பொதுமக்கள் தகவல் தெரிவித்தனர்.

இதனையடுத்து, அந்தப் பகுதிக்கு சென்ற பொலிஸார் பார்வையிட்டதுடன், துப்பாக்கி இருந்த பகுதியின் நிலப்பகுதியை மேலும் தோண்டி சோதனையிடுவதற்கு நீதிமன்ற உத்தரவு பெற்றனர்.

இதனையடுத்து, தாண்டியடி விசேட அதி



ரடிப்படையினரின் குண்டு செயலிழக்கும் பிரிவினர் வரவழைக்கப்பட்டு, அந்த பகுதியை தோண்டித் தேடுதலில் ஈடுபட்டனர்.

இதன்போது, பாவிக்க முடியாத நிலையில் இருந்த ரி56 ரக துப்பாகிகள் 2 மீட்கப்பட்டுள்ளன. இது கடந்த காலத்தில் விடுதலைப் புலிகனால் பாவிக்கப்பட்ட துப்பாக்கிகளாக இருக்கலாமெனப் பொலிஸார் தெரிவித்தனர்

# கைக்குண்டுகளுடன் பெண் ஒருவர் கைது

ஹேமாகம, பிட்டிபான பகுதியில் வைத்து ஒரு தொகை ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட நபருடன் தொடர்புடைய பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பெண்ணிடம் இருந்து 7 கைக்குண்டுகள், 77 தோட்டாக்கள் மற்றும் 2 உடற்கவசங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# அரசியல் கைதிகள் உடன் விடுவிக்கப்பட வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் வேலாயுதம் கணேஸ்வரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 02

சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் உடன் விடுவிக்கப்பட வேண்டும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் வேலாயுதம் கணேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோட்டாபய – மஹிந்த தலைமையிலான அரசின் ஆட்சிக் காலத்தில் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் அறவே இல்லை.

இந்த ஆட்சியில் அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் அரசியல் கைதிகளை வைத்து அரசியல் மட்டும்தான் நடத்துகின்றன. அவர்களை விடுவிக்கக்கூடிய எந்தவிதமான முன்னேற்ற நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.



சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள். இதில் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ உறுதியாக இருக்கின்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் தளபதிகளும் பொறுப்பாளர்களும் தேர்தல் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றபோது அப்பாவி தமிழ் இளைஞர்களை 'தமிழ் அரசியல் கைதிகள்' என்ற பெயரில் சிறைச்சாலைகளில் அடைத்து வைத்திருப்பது ஏற்புடையதல்ல – என்றார்.

# சுவரொட்டிகள் ஒட்டினராம் இருவருக்கு விளக்கமறியல்

(எவ்.முபாரக்)

திருகோணமலை வான் எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் ஒருவரின் புகைப்படங்களை ஒட்டிய இருவரை நாளை 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் விசானி தேனவது நேற்று உத்தரவிட்டார்.

வான்எல, கந்தளாய், பகுதியைச்சேர்ந்த 19, மற்றும் 20 வயதுடைய இருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் நேற்று முன்தினம் இரவு வான்எல பகுதியில் ஐக்கிய மக்கள் சக்தி வேற்பாளரின் புகைப்படம் அடங்கிய போஸ்டர்களை சுவர்களில் ஒட்டித்திரிந்த வேளையிலே பாதுகாப்பு கடமையில் இருந்த பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள **Green Media House Pvt Ltd.** நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.07.2020 இல் வெளியிடப்பெற்றது.